பக்கங்கள்-16 | 19.புரட்டாசி.2021 | விலை-30.00






# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –356




## நாடு கடந்த தமிழீழ அரசு TRO விடம் இருக்கும் பணம் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போதுமானது – சிந்திக்குமா அரசு

## அரசியல் கைதிகளுடன் மோதுவது டக்ளஸ் தேவானந்தாவிற்கு நடந்தது போல லொகான் ரத்வத்தவுக்கும் நடக்கும் – எச்சரிக்கை!

## ஜெனீவா அமர்வுகள் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தருமா?

# நாடு கடந்த தமிழீழ அரசு TRO விடம் இருக்கும் பணம் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போதுமானது - சிந்திக்குமா அரசு

நாட்டில் கொரோனா வைரசின் தாக்கம் அதிகரித்து செல்வதனால் மக்களின் அன்றாட தேவைக்கான பிரச்சனைகள் பாரிய இக்கட்டான சூழ்நிலைக்குள் சென்று கொண்டிருக்கின்றது. இலங்கையில் அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற தெரிவு செய்யப்பட்ட 623 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு 100 வீத உத்தரவாதத் தொகையை வைப்பிலிடுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இந்த நடைமுறையை உடன் அமலுக்கு வரும் வகையில் செயற்படுத்து மாறு இலங்கை மத்திய வங்கி அன்று (09) அறிவித்துள்ளது. இவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் பொருளாதாரத்தில் யாரும் முதலீடு செய்ய மாட்டார்கள். அந்த வகையில் அவ் பொருட்களை மாற்றுவழிகளில் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்று மக்கள் அங்கலாயித்துக்கொண்டிருக்கின்றார்கள். மூன்று மாதங்களுக்கு இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் எவ்வாறு சமாளிப்பது என்றவொரு நடவடிக்கைகளையும் மக்கள் இன்று மேற்கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே தற்பொழுது அரசாங்கம் கூறுவதாவது மலிந்தவிலையில் உள்ளாடைகள் வழங்கப்படும் என்று மக்களை கேவலமான முறையில் நடத்தும் வகையிலான நடவடிக்கைகளை இவர்கள் பயன்படுத்துகின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையிலே வன்னி நிலப்பரப்பிலே 1 லீற்றர் பெற்றோல் 10 ஆயிரம் ரூபாவிற்குகூட வாங்குமளவிற்கு மக்களிடம் பணம் இருந்தது என்பதனை குறிப்பிட்டுக் கொள்ளலாம். அதேபோன்று சவர்க்காரம், உரம் போன்று என்னென்ன வெல்லாம் தடை செய்தார்களோ தடை செய்யப்பட்ட அத்தனை பொருட்களும் அங்கு இருந்தது. எந்நேரமும் தடை செய்யப்பட்ட பொருட்களை பெற்றுக் கொள்ளலாம். அதேபோன்று கொழும்பிலே ஓடாத வாகனங்கள் கூட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலே ஓடிக் கொண்டிருந்தது.

ஆகவே அவ்வாறானதொரு வறுமைக் காலம் நிகழ்ந்த பொழுதிலும்கூட மக்கள் தமது பணத்தை வைத்து பொருட்களை வாங்குகின்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு தான் இருந்தது. ஆனால் தற்பொழுது என்றுமில்லாதவாறு வறுமையின் உச்சத்தை தொடுகின்ற அளவு மத்திய வங்கியில் கூட பணம் இல்லாதளவிற்கு இருக்கின்றது. ஒரு பங்குரோத்து நிலை அடையும் அளவிற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களினுடைய குடும்ப அரசியல் கொன்றுவிட்டது என்பது மிகவும் கவலைக்குரிய விடயம். இன்று அவரோடு ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழரசியல் தலைமைகள் மௌனித்தவர்களாக வாயை மூடிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அரசாங்கத்தின் பின்னால் வால்பிடித்துக்கொண்டு திரிகின்றார்கள். இது உண்மையிலே ஒரு பொருளாதார ரீதியான பிரச்சனை. இந்த கால கட்டத்திலே போடவேண்டிய தேவை யில்லை. கொரோனா வைரசை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்திருக்க வேண்டும். குறிப்பாக கொரோனா வைரசை பரப்பிய சீன நாட்டுடன் நட்புறவை கொண்டிருக்கின்றார்கள் இது முதலாவது பிழை. இரண்டாவது அவர்கள் என்னென்ன ஊசிகளை இங்கு கொடுக்கின்றார்கள். மீண்டும் இந்த ஊசிகளினால் என்ன பாதிப்புக்கள் வருகின்றது இவர்களுடைய உற்பத்தி பொருட்களில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளது என்பதைக்கூட ஒரு குழுவை வைத்து ஆராயவில்லை. ஊசிகள் வந்தவுடன் அனைத்து இடங்களிற்கும் அனுப்பப்படுகின்றது. போடப்படுகின்றது இதனால் என்ன பின்விளைவுகள் வரப்போகின்றது என்று யோசிக்கவில்லை. ஏனென்றால் ஐந்து வருடங்கள் 10 வருடங்களின் பின் அந்த ஊசி வேலை செய்யக்கூடிய நடவடிக்கைகளை அபிவிருத்தியடைந்த நாடுகள் ஒரு யுத்த சூனிய பிரதேசங்களாக இருந்த பிரதேசங்கள்கூட இவ்வாறு பரீட்சித்துப் பார்த்திருக்கின்றார்கள்.

இலங்கையொரு தீவு அந்த தீவிலே சீனா தனது பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு அல்லது தன்னுடைய உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான ஒரு தளமாக அவர்கள் கறுப்பு பணத்தை உழைப்பதற்கான நடவடிக்கையை இலங்கையில் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இலங்கையொரு தீவு என்ற வகையிலே கழிவுகள் கொட்டப்படுகின்ற ஒரு நாடாக மாற்றப்படவேண்டும் அல்லது சீனா அவர்களுடைய ஊசிகளை உற்பத்தி செய்கின்ற கம்பனிகளை நிறுவ வேண்டும் இவ்வாறெல்லாம் அவர்கள் நினைக்கின்றார்கள். ஏனென்றால் இங்கு அதனை உற்பத்தி செய்கின்றபொழுது தொற்று இந்த நாட்டுக்குள் மட்டும் தான் வரும் சுற்றிவர கடல் என்பதனால் ஏனைய நாடுகளுக்கு பரவப்படமாட்டாது என நினைக்கின்றார்கள்.

ஆகவே சீனாவினுடைய இராஜதந்திர நகர்வுகளை முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டும். கடனைக்கொடுத்து கோட்டபாய ராஜபக்சவின் குடும்பத்தை அமர்த்தி வைத்திருக்கின்றது. ஒரு ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டால் அடுத்துவருகின்ற ஆட்சி இலங்கையை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அது தமிழர்களாக இருக்கலாம் முஸ்லிம்களாக இருக்கலாம் சிங்களவர்களாக இருக்கலாம் எமது நாட்டை சீனர்களிடமிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையை நாம் மேற் கொள்ள வேண்டும். இந்தியாவோ அமெரிக்காவோ அவர்கள் இருந்த காலகட்டத்தில் இவ்வாறானதொரு நிலைமையை இந்த நாட்டில் உருவாக்கவில்லை. நாட்டினுடைய அடுத்தடுத்த கட்ட நகர்வுகள் மிகவும் ஒரு ஆபத்தை கொடுக்கின்ற சூழலை உருவாக்கப் போகின்றது என்றுதான் நாம் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்லாது இன்றைய கால சூழலிலே மக்களுக்கு அத்தியாவசியமற்ற பொருட்களை பார்க்கும் பொழுது உண்மையிலே அத்தியாவசியமான பொருட்களும் அதற்குள்ளே அடங்குகின்றன. அன்றாடம் அவர்கள் பாவிக்கின்ற பாவனைப்பொருட்களைக்கூட அரசாங்கம் அத்தியாவசியமற்ற பொருட்கள் என்று கூறும் பொழுது இது தொடருமாக இருந்தால் மக்கள் லுங்கியையும் கோவணத்தையும் அணிந்து கொண்டு நடமாடும் சூழலே உருவாகும். அது அந்த காலகட்டத்திலே தமிழர்களுடைய கலாச்சார உடைகளாக இருந்தாலும் கூட ஒருகாலகட்டத்திலே சிறிமாவோ பண்டாரநாயக்க பொருளாதார தடையை இந்த நாட்டிலே விதித்தபொழுது அவர்களுடைய ஆட்சியே கவிழ்க்கப்பட்டது இதுதான் அவர்களுடைய திட்டம். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அத்திட்டம் சாத்தியப்படமாட்டாது.



அப்படியிருந்தால் இங்கிருந்து எதை நாம் உற்பத்தி செய்து வெளிநாடுகளிற்கு விற்பனை செய்வது? சுற்றுலா வழங்குகின்றதா இல்லை. சுற்றுலா வழங்குமாக இருந்தால் அதை நல்ல விடயமாக எடுத்துக்கொள்ளலாம். சுற்றுலா துறை கூட இந்த கொரோனா வைரசினுடைய தாக்கம் காரணமாக மலுங்கிப்போய் இருக்கின்றது. அதேநேரத்தில் ஒரு உள்ளாடை ஒரு மாதத்திற்குள் மாற்றுவார்கள் அதனை உலர வைத்து பாவிப்பார்கள். எனவே ஒரு மாதத்தில் 1 அரைக்கோடி உள்ளாடைகள் இறக்குமதி செய்யப்பட வேண்டும். இறக்குமதி செய்யப்படுவதற்கான நிதி வழங்கப்பட வேண்டும். அந்த நிதி வழங்கல் உருவாக்கப்படாவிட்டால் அடுத்தக்கட்ட நகர்வை நோக்கி செல்லமுடியாத சூழல் உருவாகும்.

இன்று கையடக்க தொலைபேசிகளினுடைய உதிரிப்பாகங்கள் வருகின்ற பொழுது குறைந்தது ஒரு வீட்டிலே சராசரியாக மூன்று கையடக்க தொலைபேசிகள் வைத்திருப்பார்கள் இந்த மூன்று கையடக்க தொலைபேசிக்குமாக குறிப்பாக 3 கோடி உதிரிப்பாகங்கள் எடுக்க வேண்டுமாக இருந்தால் 3 கோடிக்கு மேற்பட்ட உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்ய வேண்டும். இப்படி ஒவ்வொரு மாதத்திற்குள்ளேயும் மாறி மாறி வருகின்ற சுழற்சி முறையாக இருக்கின்றது. இன்று பாவனைப்பொருட்களை ஏதோவொரு கம்பனி உற்பத்தி செற்பத்தி வருகின்றது. இதன் பாவனை ஒரு வருடமோ அல்லது ஆறு மாதங்களோ மட்டும் தான். அதற்கு மேல் அந்த பொருளை பாவிக்க முடியாது. செருப்புகளாக இருந்தாலும் கூட அவை ஆறு அல்லது மூன்று மாதங்களுக்குள் தேய்ந்துவிடும். அவர்கள் ஒருகோடி பத்துகோடி செருப்புகளை கூட கொள்வனவு செய்யவேண்டிய தேவையிருக்கின்றது.

தற்பொழுது இது 2 மாதங்கள் தாக்கிப்பிடிக்குமளவிற்கு மத்திய வங்கியிலே பணம் இல்லை என்றால், டொலர் இல்லை என்றால் இந்த நாட்டினுடைய ஒவ்வொரு பாகங்களையும் சீனாவிற்கு விற்று பணமாக்கிக்கொண்டு செல்வதில் எந்த பிரயோசனமும் இல்லை. கடன் வாங்கியவன் கடன் வாங்கியவனுக்கு அடிமை என்பது போல அவ்வாறு அடிமையான சூழல் உருவாக்கப்படும். அதுமட்டுமன்றி 2041 ஆம் ஆண்டளவிலே போர்ட்சிற்றியானது நிறைவுக்கு வருகின்றபொழுது 2000 சீன குடும்பங்கள் தான் அங்கு குடியேற்றப்படப்போகின்றார்கள். அது மட்டுமல்லாது தற்பொழு 1500, 2000 சீனப்புலனாய்வாளர்கள் இந்த நாட்டிற்குள் இருக்கின்றார்கள். அம்பாந்தோட்டை துறைமுகம் தற்பொழுது அவர்களின் வசமாகியிருக்கின்றது. 99 வருடங்கள் குத்தகை அடிப்படையிலே கொடுக்கப்படப்போகின்றது. இதில் அடுத்தடுத்த கட்டங்களாக என்ன நிகழப்போகின்றது. ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே கடல் வளத்தை சூழவும் இந்த சீன அரசாங்கம் வைத்துக்கொண்டு உலகப்போர் ஏற்பட்டால் அதிலே ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே வலிந்து ஒரு தாக்குதலை செய்வதற்கு இந்த இலங்கையை சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் தான் அவர்கள் செயற்படுகின்றார்கள்.

12ஆம் பக்கம் பார்க்க...

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

# கொரோனா வைரசும் இலங்கை பொருளாதாரமும்

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து சென்று கொண்டிருந்த நிலையில் தற்பொழுது குறைந்து செல்வதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இருந்த போதிலும் டெல்டா. கருப்புபூஞ்சையின் பரவலும் தாக்கமும் அதிகரித்துச் செல்வதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்ற நிலையில். மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியமாக காணப்படுகின்றது. தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் தொடர்ந்து போடப்பட்டிருப்பதனால் மக்கள் அத்தியவசிய தேவையின்றி வெளியில் வருவதை தவிர்த்து பாதுகாப்பாக இருப்பது முக்கியமானதாக இருக்கின்றது.

தற்போதைய நிலையில் இலங்கையின் பொருளாதாரமும் வீழ்ச்சியான நிலையில் இருக்கின்றது. போதியளவான டொலர் கையிருப்பில் இல்லை. நாடு இன்னும் கடனையே பெற்றுக்கொண்டிருக்கின்றது. வாங்கிய கடனுக்காக நாட்டின் ஒரு சில பகுதிகள் சீனாவுக்கு எழுதி கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. மத்திய வங்கியினால் பணம் அச்சிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையானது மக்கள் மத்தியில் இன்னும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்றே கூற முடியும். அவ் அறிக்கையானது 100வீத உத்தரவாத தொகையை வைப்பிலிட்டு பொருட்களை இறக்குமதி செய்துக்கொள்ளலாம் என்று கூறுவது அரசாங்கத்தினால் நேரடியாக பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு தடை என்பதை கூற முடியாமல் மறைமுகமாக கூறுவதாகவே பார்க்கமுடிகின்றது. ஏனென்றால் 100வீத உத்தரவாத தொகையை வைப்பிலிட்டு பொருட்களை வர்தகர்கள் இறக்குமதி செய்யபோவதில்லை. அவ்வாறே இறக்குமதி செய்யப்பட்டாலும் அந்த பொருட்களின் விலை அதிகமாக காணப்படும். நாட்டில் பண வீக்கம் ஏற்படும் என்பது உண்மை. அத்துடன் நாட்டின் நிலை என்வாக இருக்கும் என்பதை எல்லோராலும் ஊகித்துக்கொள்ள முடியும்.

இந்தநிலையில் இலங்கை நாடு தற்பொழுது மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டிருக்கின்றது.அத்துடன் கொரோனாவின் தாக்கம் இன்னொருபுறம். பொருட்களின் விலையேற்றம் இவற்றையெல்லாம் அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகின்றது என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இதனால் பாதிக்கப்படுவோர் மக்கள் மாத்திரமே. எனவே தற்போதைய அரசானது இவற்றையெல்லாம் உணர்ந்து நாட்டையும் நாட்டு மக்களையும் சரியான பாதையில் கொண்டு நடத்துவது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது.

# 160 உலக வரலாந்றில் குறுஞ்சமர்

இதனால் திகைப்புத்தாக்குதல் எனும் காரணி தணிக்கப்படுகின்றதுடன், வாகனத்தொடரணி பூரண சமர்த் தயார்ப்படுத்தலோடும் அவ்விடத்தை நெருங்குகின்றது. ஆனால், இந்நேரத்தில் வானொலி மூலம் உதவியம் கேட்கப்பட்டிருக்கும். தரையிறக்கப்பட்டவர்கள் மீள உலங்குவானூர்தியில் ஏற்றப்பட்டு, இன்னும் சில கிலோமீற்றர்கள் முன்னால் தரையிறக்கிவிடப்படுகின்றனர். இந்த முறையமைப்பு வாகனத் தொடரணியைக் காப்பதற்கான வினைத்திறன் மிக்க முறையமைப்பாக விளங்கியது.

ஈ) மலைகளிலும் கிராமங்களிலுமுள்ள கெரில்லாக்களின் ஆதார நிலைகள் மேல் ஆட்டிலறித் தாக்குதல்களையம் விமானத் தாக்குதல்களையும் மேற்கொள்ளல். ரி.யு-16, எஸ்.யு-24 ஆகிய விமானங்கள் மிக உயரத்திலிருந்து (12 கி.மீ வரையான உயரம்) குண்டுகளை வீசின. எஸ்.யு-25 தாக்குதல் விமானங்களும் உலங்குவானூர்திகளும் தமது ஏவுகணைகளையும் சுடுகலன்களையும் பயன்படுத்திக்குறைந்த உயரத்திலிருந்து எதிர்பாராத தாக்குதல்களை மேற்கொண்டன. இதுதவிர, உலங்குவானூர்திகளிலிருந்து கெரில்லாப் படைப்பிரிவுக்கான விநியோகப்பாதை செல்கின்ற மலைப்பாதைகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் அடிக்கடி சிறப்புக் கண்ணிகள் வீசப்பட்டன.

நிலத்துண்டுகளெங்கும் ஆட்டிலறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. பிரதான ஆயுதங்களாக பல்குழல் எறிகணை செலுத்தி பி.எம்-21 மற்றும் பி.எம்-27 (220 மி.மீ எதிர்ச்செயற்பாட்டு எறிகணைகள்), டி-30 122 கி.மீ கொவி ட்சர், எம்-69 76 மி.மீ மலைக்குரிய கொவிட்சர், 100 மி.மீ ராங்கியெதிர்ப்பு எறிகணை செலுத்தி, 240 மி.மீ மோட்டார் போன்றன விளங்கின. குறிப்பாக, விமானத் தாக்குதல்களும் ஆட்டிலறித் தாக்குதளுமே சமர் நடவடிக்கையில் பங்கெடுக்காத பொதுமக்கள் (பெண்கள், குழந்தைகள், முதியவர்கள்) மத்தியில் கணிசமான அளவு இழப்பு ஏற்படக் காரணமாக இருந்தன.

உ) தனியான கெரில்லாப் படைப்பிரிவுகள், அவர்களின் பலப்படுத்தப்பட்ட தளங்கள், பின்புல விநியோகங்கள் போன்றவற்றை அழிக்கும்நோக்குடனான பாரிய அளவிலான முன்னேறித் தாக்குதல் நடவடிக்கைகள். இவ்வாறான நடவடிக்கைகள் பிரதானமாக, பான்ஜேர் பள்ளத்தாக்கிலிருந்த அக்மட் ஷா மசூடின் அமைப்பிற்கெதிராக (9 மிகப் பெரிய முன்னேறித் தாக்குதல்கள்!) மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு முன்னேறித் தாக்குதலின்போதும் வலிமைமிகு ஆட்டிலறித் தாக்குதல்களும் விமானப்படையின் ஏவுகணைக் குண்டுத் தாக்குதல்களும் ஒழுங்குபடுத்தப்பட்டன. (எடுத்துக்காட்டாக, ஏழாவது நடவடிக்கையின்போது, ஒரு நாளைக்கு 100 வரை யான குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.) பின்னர் ராங்கிகளும் அதற்குப் பின்னால் கனரக வாகனக் காலாட்படைகளுடன், காலாட்படை யுத்த வாகனங்களும் கவசப் போக்குவரத்து வாகனங்களும் சென்றன. முன்னேறித் தாக்குதலின் பிரதான எல்லைக்குப் பக்கங்களிலுள்ள, கட்டுப்படுத்தி வைத்திருக்கக்கூடிய, உயரமான இடங்களில் உலங்குவானூர்திகளிலிருந்து சூட்டுப் படைப்பிரிவு தரையிறங்கி, கீழே நகர்கின்ற படைகளுக்குப் பக்கங்களிலிருந்து வரும் சூடுகளிலிருந்து காப்பளிக்கின்றது.

ஆனாலும், வழக்கமாக விளைவுகள் குறைந்தளவானதாகவே இருந்தன. வேகங்குறை ந்த யுத்த வாகனங்களின்



தாக்குதல்களிலிருந்து தப்பிப் பின்வாங்கிக் கொள்வதில் கெரில்லாக்கள் வெற்றிகண்டனர். இவர்கள் தமது பழைய இடத்திற்கு மீண்டும் திரும்பி வராமல் இருப்பதற்காகவென, சோவியத் படைகள் மக்களால் விட்டுச் சென்ற கிராமங்களையும் பண்ணைகளையும் நீர்ப்பாசனக் கட்டுமானங்களை யும் அழித்தனர். கால்நடைகளையும் விவசாயங்களையும் நாசம் செய்தனர். தோட்டங்களைப் பிடுங்கியெறிந்தனர்.

ஊ) சோவியத் மற்றும் ஆப்கானிய முகாம்களுக்கெதிராகப் போடப்பட்ட முற்றுகையை உடைக்கும் நடவடிக்கைகள் (கூடுதலாக பாகிஸ்தான் எல்லையுடனான பாக்ரியா, குணார்.சாபூல் போன்ற மாகாணங்களில்) அவை போதுமான அளவு வெற்றியைத் தந்தன. வெடிபொருட்கள், உணவுப் பொருட்கள், மருந்துப்பொருட்கள் புதிய ஆளணி போன்றவற்றைக் கொண்டு செல்கின்ற பாரவூர்திகளையும் வாகனக் கொள்கலன்களையும் உள்ளடக்கிய வாகன த் தொடரணிகள் கிட்டத்தட்ட எப்பொழுதும் சென்றடையவேண்டிய இடத்தை எட்டின. நுகர்வின்போது ஏற்படக்கூடிய இழப்பை விடப் பெரியளவில் இழப்புக்கள் ஏற்படவில்லை. ஏனெனில் கெரில்லாக்கள் இருக்கக்கூடிய இடங்கள் பற்றிய வேவுத் தகவல்கள், ஆகாயத்திலிருந்து யுத்த உலங்குவானூர்திகளின் காப்பு, கூடுதலான அளவு கவச வாகனங்கள், கவசவாகனப் படைப்பிரிவுச் சூட்டாளர்கள் போன்றவற்றினுடன் வாகனத் தொடரணி திடீரெனப் பயணத்தைத் தொடர்ந்தது.

எ) ஸ்பெற்நாஸ் படைப்பிரிவின் நடவடிக்கைகள். இந்நடவடிக்கைகளில் பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன. வண்டிப் பாதைகள், மலைப் பாதைகள் போன்ற இடங்களில் பதுங்கித் தாக்குதலும் அங்கே கண்ணிகளை வைத்தலும், ஆயுதங்களதும் வெடிபொருட்களதும் களஞ்சியங்களை அழித்தல், கட்டளையகங்களையும் தனியான கட்டளையாளர்களையும் தீர்த்துக்கட்டல் (பாகிஸ்தான் நிலப்பரப்பில் உள்ளவற்றையும்) இந்நடவடிக்கைகள் மிக வெற்றியாக நடைபெற்றன. ஆனாலும் அவை 1985 ஆம் ஆண்டிலிருந்தே மேற்கொள்ளப்பட்டன. இதற்கு முன்னர் ஸ்பெற்நாஸ் படைப்பிரிவுகள் அவற்றினது பணிக்கு மாறாகப் பிறபணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன.

விமானத்தளங்களையும் உயர் கட்டளையாளர்களையும் சில போக்குவரத்து வாகனத் தொடரணிகளையும் காவல் காத்தல், கெரில்லாக்களின் ஆதார நிலைகளைத் தாக்குதல், கனரகவாகன, ராங்கிப் பிரிவுகள் முன்னேறுவதற்காகக் கட்டுப்படுத்தக்கூ டிய உயரமான இடத்தில் உலங்குவானூர்தி மூலம் தரையிறங்கிக் காப்பளித்தல்.

சோவியத் படைகளின் செயற்பாடுகளில் பலவீனமான சில பக்கங்களைப் போர் வெளிப்படுத்தியது.

ஆளணிகள் (போர்வீரர்களும் அதிகாரிகளும் ஜெனரல்களும்) மலைகளிலும்மலைப் பள்ளத்தாக்குகளிலும் சமர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பூரண தயார்ப்படுத்தல் நிலையில் இருக்கவில்லை. அதேநேரத்தில் சிறப்பு மலைப்பிரதேசத் தாக்குதல் இராணுவப் பிரிவும் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்படவில்லை.

ஆளணிகள் கெரில்லாக்களுடன் சமரிடுவதற்குத் தயார்நிலையில் இருக்கவில்லை. கூடுதலான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட அனுபவமும் வீணடிக்கப்பட்டது. ஏனெனில், தமது சேவைக்காலத்தை முடித்துக்கொண்ட வீரர்களும் கட்டளையாளர்களும் தொடர்ச்சியாக மாற்றப்பட்டுக்கொண்டிருந்தனர். அவர்களின் இடத்திற்குப் புதியவர்கள் கொண்டுவரப்பட்டனர்.

கூடுதலான சமயங்களில் அவசியமான தீர்மானங்கள் மிகத் தாமதமாகவே எடுக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, கெரில்லாக்களால் தாக்கப்படுகின்ற பிரிவுக்கான ஆட்டிலறி ஆதரவுச் சூடுகள், வழக்கமாக சம்பவம் நடைபெற்று ஒரு மணித்தியாலத்தின் பின்பே கிடைத்தன. யுத்த உலங்குவானூர்திகளும் விமானங்களும் சமர் நடை பெற்ற இடத்திற்கு 2 - 3 மணித்தியாலங்கள் தாமதமாகவே வந்து சேர்ந்தன. சகலதும் முடிவடைந்த பின்பே, மோட்டார்த் தாக்குதல்காரர்கள் போக்குவரத்து வாகனத் தொடரணிக்குக் கைகொடுத்தனர்.

வேவ்வேறு வகைப் படைகளுக்கிடையிலான (மோட்டார்த் தாக்குதலாளர்கள், ஆட்டிலறியாளர்கள், ராங்கிப்படையாளர் வான்குடைவீரர்கள், விமானப்படையாட்கள்) தொடர்பும் ஒருமித்த நடவடிக்கைச் செயற்பாடும் சீரற்ற முறையில் இருந்தன.

பெரும்பாலான .ளைய அதிகாரிகள் (பிளாட்டூன்களதும் கொம்பனிகளதும் கட்டளையாளர்கள்)) "விதிமுறைகளுக்கமைவான" ஒரேமாதிரியான செயற்பாடுகளை மேற்கொள்பவர்களாக இருந்தார்கள். அவர்களிடம் படைப்புத்திறன் இல்லாமலருந்ததுடன், மந்தப்போக்கும் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்களை எடுப்பததைத் தவிர்க்கும் முயற்சிப்போக்கும் கொண்டவர்களாக இருந்தார்கள்.

தொடர்வான்...
நெற்றிபொறியன்

# ஜெனீவா அமர்வுகள் தமிழ்மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தருமா?





ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 48வது அமர்வு, ஜெனிவாவில் அன்று (செப்டம்பர் 13) தொடங்கியது. இதில் உரையாற்றிய மிச்செல் பெச்சலட், இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து பேசினார்.

உணவு பாதுகாப்பு மற்றும் விலை கட்டுப்பாடு ஆகியவற்றை மேற் கொள்ளும் நோக்கில் இலங்கை அரசாங்கத்தினால் அமல்படுத்தப்பட்ட அவசரகால விதிமுறைகள் ராணுவ மயமாக்கலை தீவிரப்படுத்தும் என அவர் கூறினார். அவசரகால விதிமுறையின் சிவில் செயற்பாடுகளில் ராணுவத்தின் பங்களிப்பு மேலும் விரிவாகும் என்றும் சமூக, பொருளாதார ஆட்சியில் இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள சவால்கள் ராணுவ மயமாக்கலின் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். ராணுவ செயற்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபை, மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் ஆணையாளர் மிச்செல் பெச்சலட் குறிப்பிட்டார். பின்னர் அவர் தமது கவலைகளை ஒவ்வொன்றாக பட்டியலிட்டார்.

### ஆணையாளர் முன்வைத்த குற்றச்சாட்டு

அமைதியான எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நினைவேந்தல்களை அனுசரிக்கும் நபர்களை, அரசாங்கம் தமது அதிகாரங்களை பயன்படுத்தி கைது செய்வதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களில் பலவந்தமாக தடுத்து வைத்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

சிவில் சமூக குழுக்கள் மீது புதிய கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இலங்கையின் சிவில் சமூகக் கருத்தாடலுக்கான வழிகள், பரந்த கலந்துரையாடல்கள் ஊடாக திறக்கப்பட வேண்டும் என ஆணையாளர் மிச்செல் பெச்சலட் வலியுறுத்தினார்

துரதிருஷ்டவசமாக மனித உரிமை பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் காணாமல் போனோரின் குடும்பங்கள் மீதான கண்காணிப்பு, மிரட்டல்கள், நீதித்துறை துன்புறுத்தல்கள் ஆகியன தொடர்ந்தும் முன்னெடுக்கப் படுவதுடன், மாணவர்கள், கல்வியா ளர்கள், வைத்திய நிபுணர்கள், மத தலைவர்களின் அரசாங்கம் மீதான விமர்சனங்களுக்கு வரையறைகள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அடிப்படை சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகள் கடுமையாக்க ப்படலாம் என்ற அச்சம் காணப்படுவதா கவும் அவர் கூறினார்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, மிக நீண்ட காலம் சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை இலங்கை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்

2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மத தலைவர்கள் நியாயத்தை நிலைநாட்ட வேண்டும் என கோரிக்கை விடுத்து வருவதையும் அவர் நினைவுகூர்ந்தார்.

இந்த நிலையில், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, நம்பிக்கையில்லா சாட்சியங்கள் இல்லாது, நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாக 16 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமை தொடர் பிலான வழக்கு விசாரணைகள் குறித்தும் மிச்செல் பெச்சலட் கவலை வெளியிட் டார்.

2008 மற்றும் 2009ஆம் ஆண்டில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில், முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரணாகொடவிற்கு எதிரான வழக்கை தொடர முடியாது என சட்ட மாஅதிபர் அறிவித்தது, 2011ஆம் ஆண்டு அரசியல் வாதியின் கொலை குற்றத்திற்காக தண்டனை வழங்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு, ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியது போன்ற செயல்பாடுகள், நீதி செயல்முறை மீதான நம்பிக்கையை இல்லாது செய்வதாக மிச்செல் பெச்சலட் தெரிவித்தார்.

பொலீஸ் தடுப்புக் காவலில் உள்ளவர்கள் மேலும் உயிரிழப்பது, போதைப் பொருள் குற்றத்தில் ஈடுபடுவோர் மீதான துப்பாக்கி பிரயோகங்கள் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகள் மீதான தொடர் சித்திரவதைகள் மற்றும் மோசமான நடத்தைகள் குறித்து தான் கவலை அடைவதாகவும் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் மிச்செல் பெச்சலட் கூறுகின்றார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரத்தை முன்னகர்த்தி செல்லும் இணை அனுசரனை நாடுகள் இலங்கையின் நிலவரம் குறித்து கவலை வெளியிட்டுள்ளன.

பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, வடக்கு மஸிடோனியா, மலாவி, மொண்டி நீக்ரோ முதலான ஆறு நாடுகள் சார்பில், ஐக்கிய நாடுகளுக்கான பிரித்தானிய தூதுவர் சைமன் மென்லே மனித உரிமைகள் மாநாட்டில் உரையாற்றி யுள்ளார்.

இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டம் பற்றிய நீண்டகால கரிசனைகள் தொடர்ந்தும் உள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார். இலங்கை தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கு நன்றி தெரிவித்த இணை அனுசரணை நாடுகள், தீர்மானம் 46/1**(தமிழ் மக்களுக்கு மனித உரிமை பேரவையின் பிளவுபாடு, மேற்குலக பிரச்சனை, தமிழ் மக்களுக் குரிய ஐந்து பிரச்சனைகள், விடுதலை ப்புலிகளினுடைய அரசியல் கட்டமைப்பே த.தே.கூட்டமைப்பு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடன் விரைவில் விடுதலைக்கான பேச்சு வார்த்தைகள், வெளிநாட்டு,உள்ளக ரீதியான பொறிமுறை முன்னெடுக் கப்பட வேண்டும்,)** ஐ செயற்படுத்த உறுப்பு நாடுகள், தேவையான வளங்களை மனித உரிமைகள் பேரவைக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

கொவிட்-19 பரவலால் இலங்கை எதிர் நோக்கியுள்ள சவால்களை தாங்கள் உணர்ந்துள்ளதாகவும், அதனால் உயிரிழந்தவர்களுக்க அனுதாபம் தெரிவிப்பதாகவும் இணை அனுசரனை நாடுகள் தெரிவித்துள்ளன.

விரிவான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை தாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும், காணாமல்போ னோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளு க்கான அலுவலகத்தின் தொடர்ச்சியான செயல்பாட்டை உறுதி செய்வதற்கும் இலங்கையின் அறிவிக்கப்பட்ட நோக்கத்தை தாங்கள் கவனிப்பதாகவும் இணை அனுசரணை நாடுகள் குறிப்பி ட்டுள்ளன. குறித்த அலுவலகங்களின் அரசியல் சுதந்திரத்தை உறுதிப்படுத் துமாறு அரசாங்கத்துக்கு தாங்கள் அழைப்பு விடுப்பதாகவும் அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 46/1 நிறுவப் பட்ட அனைத்து வெளியக முன்மொ ழிவுகளையும் நிராகரிப்பதாக ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடரில், இணைய வழி காணொளி மூலம் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் நிலைப்பா ட்டை அறிவித்துள்ளார்.

கௌரவ. பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் அவர்களின் அறிக்கை (ஜெனீவா, 2021 செப்டம்பர் 14)

எமது அரசியலமைப்பு மற்றும் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க, மனித உரிமை முறைமையினால் கட்டளை யிடப்பட்டுள்ள இந்த சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையுடனான எமது வலுவான மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்பை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம் எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங் கரவாதத்தை தனது மண்ணில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை ஒழித்தது. நாம் எமது மக்களின் நலனுக்காக சமாதானம், பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுத்து ள்ளோம்.

11 ஆம் பக்கம் பார்க்க...

# அரசியல் கைதிகளுடன் மோதுவது டக்ளஸ் தேவானந்தவிற்கு நடந்தது போல லொகான் ரத்வத்தவுக்கும் நடக்கும் – எச்சரிக்கை!

அரசியல் கைதிகள் அன்று டக்ளஸ் தேவானந்தாவை தாக்கியது போன்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை தாக்கியிருந்தால் நிலைமை என்னவாயிருக்கும். இன்றைய அரசியல் சூழ்நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மெகசின். அநுராதபுரம். போகம்பர. மகர. வெலிகடை போன்ற சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறைச்சாலைகளுக்கு கைதிகளை சந்திக்க செல்பவர்கள் இரவு நேரத்தில் செல்லதடை செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களை பார்வையிடுவதற்கான நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளுள் மாத்தையா என்று குறிப்பிடப்படுவர்கள் “காம்பரா பார்ட்டி” அங்கு பணிபுரிகின்ற கைதிகள் அவர்களும் எல்லா வேலைகளும் முடிந்து இரவு 11 மணியளவில் அவர்களையும் சிறைக்குள் அடைப்பார்கள். இந்த காம்பரா பார்ட்டி வேலை செய்பவர்களை 4 மணியளவில் திறந்துவிடுவது வழக்கம். இந்த நிலையில் ஒரு இரவு நேரத்தில் இராஜாங்க அமைச்சர் ஒருவர் அதுவும் இரவு நேரத்தில் சென்று பார்வையிட்டு அரசியல் கைதிகளுடன் பேசுவது என்பது வம்பை விலை கொடுத்து வாங்குமொரு செயற்பாடு.

முதலாவதாக சிறைச்சாலை விதிகள் பற்றி இவருக்கு தெரிந்திருக்க வேண்டும். அன்று டக்ளஸ் தேவானந்தாவை 1998 இல் களுத்துறை சிறைச்சாலையில் வைத்து தமிழரசியல் கைதிகள் சரமரியாக தாக்கினார்கள். அவர் இறந்துவிட்டார் என்று தோன்றியதன் பின்னரே தாக்கியவர்கள் சென்றனர். இவர் துரதிருஷ்டவசமாக தப்பித்துவிட்டார். சந்திரிக்காவின் ஆட்சிக்காலமாக இருந்ததால் அவரிற்கு தீவிர சிகிச்சையளித்து தப்பவைத்தார். தமிழ் அரசியல் கைதிகள் என்பவர்கள் ஆயுத பயிற்சிகளை பெற்றிருப்பவர்கள். அவர்கள் ஆயுதங்கள் இயக்க தெரியாதவர்கள் என்று கூறி விட முடியாது. குறித்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை அவர்கள் தாக்கியிருக்கலாம் அல்லது கொலை செய்திருக்கலாம். அவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருந்தால் அநுராதபுர சிறையில் இருப்பவர்கள் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். அல்லது சித்திரவதை செய்யப்பட்டு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பார்கள். ஒரு சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் உயர் அதிகாரி வருகின்றார் என்ற காரணத்தினால் சிறையில் பணிபுரிகின்ற காவலாளிகள் அதிகாரத்திற்கு உட்பட வேண்டும் என்பதற்காக அரசியல் கைதிகளை திறந்து பார்வையிட அழைத்து சென்றிருப்பார்கள். தலையில் பிஸ்டலை வைத்து சுடுவேன் என மிரட்டியதையும் கால் சூவை காட்டி துடைக்க வேண்டும் என்றதுமே தமிழ் அரசியல் கைதிகளை வெறுப்பேற்றும் செயற்பாடாகும்.

இந்த செயற்பாட்டிலிருந்து அரசாங்கம் முற்றிலுமாக ஒரு மாற்றத்தை கொண்டுவர வேண்டும். எதிர்வரும் காலங்களில் சிறைச்சாலைக்குள் உயர் அதிகாரிகள் சென்றால் அவர்கள் தாக்குதலுக்கு இலக்காகும் சந்தர்ப்பத்தை குறித்த இராஜாங்க அமைச்சர் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்பது மிகத்தெளிவாகின்றது.

குறித்த ஜெனீவா காலகட்டத்தில் இவர் ஏன் சிறைச்சாலைக்குள் செல்ல வேண்டும் என்பதும் தற்போது பலருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் செயற்படுகின்றது என்பது சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவது இவரின் சிறைச்சாலைக்கான வருகை என்பதும் அங்கு அரசியல் கைதிகள் மீது நடந்துகொண்ட விடயங்களும் சந்தேகங்களை மேலும் வலுப்படுத்தி நிற்கின்றது. அவரை அரசியல் கைதிகளின் விடுதலை என்ற விடயத்தில் அரசாங்கம் தீர்க்கமான முடிவு களை மேற்கொள்ளவேண்டும்.

பிரச்சனைகளை அரசு தன்வசம் வைத்துக்கொண்டு அதற்கான தீர்வுகள் எட்டப்படாதவரையில் தொடர்ந்தும் பிரச்சனைகள் உருவெடுக்க காரணமாக இருக்கின்றன. தொடர்ச்சியாகசிறைச்சாலையில் மீறப்பட்ட ஜனநாயகங்கள் பற்றி விவரமாக பார்க்கும் பொழுது சிங்கள பௌத்த அரசியலின் அடிப்படைக் கருத்தியலை இலங்கையின் ஆட்சியாளர்கள் என்றைக்கும் கேள்விக்கு உட்படுத்தியதில்லை.

அந்தவகையில் சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள். தமிழர்கள் என்பதற்காகக் தாக்கப்படும் மற்றும் அச்சுறுத்தப்படும் பல சம்பவங்கள் தொடர்ச்சியாகவே பதிவாகி இருக்கின்றன அதே போல சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்படும் சம்பவங்களும் பதிவாகி இருக்கின்றன

குறிப்பாக கடந்த மஹிந்த ராஜபக்சே ஆட்சி காலத்தில் அரசியல் கைதிகளாக




வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிமலரூபன் . டில்ருக்ஸன் ஆகியோர் அடித்து கொல்லப்பட்டு இருந்தனர்

அதே போல 2011 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதியன்று அனுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த சுமார் 65 தமிழ் அரசியல் கைதிகள் சிங்கள சிறைக் காவலர்களால் கொடூரமான முறையில் நிர்வாணமாக்கப்பட்டு தாக்கி காயப்படுத்தபட்டு இருந்தனர்.

இதே போன்று சந்திரிகா பண்டாரநாயக்க ஆட்சி காலத்தில் 1997 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12 ஆம் திகதி களுத்துறை நகரில் உள்ள உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் மூன்று தமிழ் அரசியற் கைதிகள் வெட்டிக் படுகொலை செய்யப்பட்டனர்.

இது தவிர, 2000 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 25 ஆம் திகதி பிந்துனுவேவா என்கிற இடத்தில் அமைக்கப்பட்டு இருந்த தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டு இருந்த தமிழ் அரசியல் கைதிகள் 27 பேர் தடுப்பு முகாமிற்குள் அத்துமீறி நுழைந்த சிங்கள கும்பல் ஒன்றினால் வெட்டி படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் இவ்வாறான கொடூரங்களில் சம்பந்தப்பட்ட எவரும் இதுவரையில் தண்டிக்கப்படவில்லை

குறைந்த பட்சம் இலங்கை சிறைச்சாலைகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் தமிழ் கைதிகளை எந்தவொரு ஆட்சியர்களும் அரசியல் கைதிகளாக ஏற்று கொள்ள கூட தயாரில்லை.

இதன் தொடர்ச்சியாக கடந்த ஞாயிற்று கிழமை அனுராதபுர சிறைச்சாலையில் ராஜாங்க அமைச்சர் லொகன் ரத்வத்தே அவர்கள் அத்துமீறி நுழைந்து தமிழ் அரசியல் கைதிகள் மீது கொலை மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் விடுத்த குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய சம்பவம் ஒன்று பதிவாகி இருக்கின்றது . ஆனால் சம்பவம் நடைபெற்று 3 நாட்கள் கடந்து விட்ட பின்னரும் ராஜாங்க அமைச்சர் லொகன் ரத்வத்தே அவர்கள் மீது பொலிஸ் தரப்பில் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட வில்லை

மாறாக மேற்குறித்த சம்பவம் பொதுவெளியில் அம்பலப்படுத்த பட்ட நிலையில் லொகன் ரத்வத்தே அவர்கள் தான் வகித்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சில் இருந்து விடுவிக்கப் பட்டு இருக்கின்றார்

ஆனால் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் துறை சார்பான இராஜாங்க அமைச்சராக தொடர்ந்து செயல்படுவார் என சொல்லப்படுகின்றது.

கிரிமினல் சட்டங்களுக்கு கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றங்கள் தொடர்ப்பான குற்றசாட்டுகளை எதிர்கொள்ளும் லொகன் ரத்வத்தே அவர்களை தொடர்ச்சியாக இராஜாங்க அமைச்சராக இயங்க அனுமதிக்க பட்டு இருக்கின்றார்

எவ்வாறாயினும் வரலாற்றின் தொடர்ச்சியாக மேற்குறித்த சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கோ அல்லது குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படுவதற்கோ எந்த வாய்ப்பும் இல்லை என்பதே 70 ஆண்டுகால துயரமாக இருக்கிறது

குறிப்பாக அரசியல் கைதிகள் மீது பலிவாங்கும் உயர் அரசியல் அதிகாரிகள் பலி தீர்க்கப்பட்ட வரலாறுகளும் பதிவாகியிருக்கின்றன. மீண்டும் ஒரு இரத்த களரியை உருவாக்கும் செயற்பாடாக இப்பேட்பட்ட சிங்கள பேரினவாதிகள் செயற்படுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே இன்றைய நிலைப்பாடு. இவர்களால் நாட்டின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உலக நாடுகளால் அவப்பெயர் உருவாகிறதே தவிர வேறு எந்த பயனுமில்லை.

**இரணியன்**

# நாட்டில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இரட்டை குடியுரிமை பெற்றவர்களை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்

## அரசியல் ஆய்வாளர் செல்வரட்ணம் சுதாகர் அவர்களுடனான நேர்காணல்





**கேள்வி : இன்றைய அரசியல் கால சூழலிலே பல்வேறுபட்ட அரசியல்கள் அதாவது பூகோள அரசியல் சம்பந்தமான விடயமாக இருக்கலாம் அல்லது தமிழர்கள் சார்ந்த பிரச்சனைகளாக இருக்கலாம் பல்வேறு விடயங்கள் இன்று பூதாகரமான நிலையிலே தள்ளப்பட்டுள்ளன. மிக முக்கியமாக கொரோனா வைரஸினுடைய தாக்கம் உலகளாவிய ரீதியில் மட்டுல்லாது இலங்கையிலும் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலே பார்க்கும் பொழுது தற்போதைய கொரோனா வைரஸ் கால சூழ்நிலையிலே இலங்கையினுடைய பொருளாதாரம் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில் : நல்லதொரு கேள்வியை கேட்டிருக்கின்றீர்கள். இதற்கு நான் பதிலளிப்பதும் மிகவும் கடினமான ஒரு விடயம். ஏனெனில் இந்த கொரோனா எந்தளவிற்கு சென்று முடியப்போகின்றது என்று நாம் ஒரு ஆறுதல் சொல்லமுடியாத நிலை. அவ்வாறிருந்தும் இன்று மட்டும் இந்த கொரோனா வைரஸினுடைய தாக்கம் இலங்கையில் ஏற்பட்டு 1 அரை வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இலங்கை பொருளாதாரம் என்றும் இல்லாதளவிற்கு அதாள பாதாளத்திற்குள் சென்றிருக்கின்றது. ஏற்கனவே இந்த பொருளாதாரம் 30 வருடங்களிற்கு மேலான கொடிய உள்நாட்டு யுத்தத்தில் இலங்கை சிக்கித்தவித்த ஒரு நாடு. அவ்வாறிருந்தும் இந்த அரசியல்வாதிகளினது திறனற்ற முகாமைத்துவம் காரணமாகவும் இந்த நாடு பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்திருக்கின்றது.

இது சாதாரண சிறு பிள்ளைகளில் இருந்து வயோதிபர்கள் மட்டும் பொருளியல் நிபுணர்கள் சொல்ல வேண்டியதற்கு அப்பால் நடை முறையில் துன்பங்களை அனுபவிக்க இந்த மக்கள் ஆரம்பித்து விட்டார்கள். அந்நியச்செலாவணி இருப்பு இந்த நாட்டில் வெகுவாக குறைந்து விட்டது. அதற்கு அப்பால் அந்நியச் செலாவணியின் பெறுமதி பாரியளவு வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இறக்குமதிகளை நிதிப்படுத்த முடியாமல் மத்திய வங்கியும் அரசாங்கமும் திண்டாடுகின்றது. இறக்குமதிகளை நிதிப்படுத்த வேண்டியது சாதாரணமாக பொருளாதாரத்தில் ஆறுமாதங்களிற்கு தேவையான பொருட்களுக்கான இறக்குமதியை நிதிப்படுத்தக்கூடிய சொத்து மத்திய வங்கியில் இருப்பில் இருக்க வேண்டும். ஆனால் நிலைமை தலைகீழாக மாறி விட்டது. அதாவது அந்நியச்செலாவணி கையிருப்பு என்பது வற்றிவிட்ட நிலையில் காணப்படுகின்றது. அதற்கு அப்பால் இந்த நிலையின் காரணம் என்ன அதாவது வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கொரோனா வைரஸினுடைய தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது. அங்கும் பாரிய தொழில் துறைகள் முடக்க நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறிருந்தும் அந்த நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கை ஏன் இந்த மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது என்பது ஒரு முக்கியமான விடயமாகவும் உள்ளது. இதற்கு காரணமாக கடந்தகாலங்களாக இந்த நாட்டில் ஏற்பட்ட நிர்வாக குழப்பங்கள், நிர்வாக சீர்கேடுகள் அரசியல்வாதிகளின் ஊழல், அதிகாரிகளின் ஊழல் என்பன மட்டும் ஒட்டுமொத்தமாக இந்த நாட்டின் தலையில் பேரிடியாக விழுந்துள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் ஆசியாவின் ஒரு முக்கிய பொருளாதாரமாக இலங்கை பொருளாதாரம் இருந்தது அதாவது யப்பானிற்கு அடுத்தபடியாக இலங்கை தனது சிறந்த பொருளாதார குறிகாட்டிகளை கொண்டிருந்தது.

ஆனால் சுதந்திரத்திற்கு பின்னர் வந்த ஆட்சியாளர்கள் இனவாத ஆட்சி தமிழர்களை இந்த நாட்டில் ஒதுக்கி வைத்த நிலைமை தமிழ் நிர்வாகிகளை இந்த நாட்டில் ஒதுக்கி வைத்த நிலைமை காரணமாக ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளும் அதைவிட ஊழல் மிக்க அதிகாரிகளும் இலங்கையை சூழ்ந்துவிட்டார்கள்.

**கேள்வி : ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் என்னும் பொழுது இலங்கையினுடைய பொருளாதாரம் தொடர்பாக பார்க்கும்பொழுது சீனாவினுடைய ஆதிக்கத்தினால் தான் இலங்கையினுடைய பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றது என்று கூறப்படுகின்றது. அது உண்மைதானா?**

பதில் : அந்த பக்கத்திலும் ஒரு நியாயம் தற்பொழுது இருக்கின்றது. அதாவது சீனா இலங்கையின் மீது கூடுதலான கரிசணையை காட்டிக் கொண்டிருக்கின்றது. அது இலங்கை மக்கள் மாத்திரமல்ல. இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகள் அந்த நாட்டினுடைய இராஜதந்திரிகள் பல தடவைகளில் இந்த விடயத்தை தெரிவித்து வருகின்றார்கள். அதன் வெளிப்படையாக அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் போர்ட்சிற்றி என்று சொல்லப்படுகின்ற துறைமுக நகரம் தற்பொழுது சீனா ஆழமாக கால் ஊன்றியிருக்கின்றது.

இன்றைய நிலைமையில் ஒரு பொருளாதார கண்ணோட்டத்தின் அடிப்படையில் நாங்கள் பார்க்கும் பொழுது இந்த கொரோனா வைரஸின் தாக்கம் அந்நிய செலாவாணியின் பாரிய வீழ்ச்சி என்பன சீனா எதிர்பார்த்தது போல் இங்கு நடைபெறுகின்றது போல் தென்படுகின்றது. ஏனெனில் இலங்கையினுடைய அந்நியச்செலாவணி விகிதம் எதிர்பாராதளவு பாரிய வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. இவ்வாறு சென்றுகொண்டிருக்கின்ற நிலைமை சீன முதலீட்டாளர்களுக்கும் சீன அரசாங்கத்திற்கும் ஒரு சார்பான நிலைமைத்தான் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள பொழுதில் குறிப்பாக சீன முதலீட்டாளர்கள் அல்லது சீன வங்கிகளின் முதலீடுகள் எல்லாம் இங்கு இலாபகரமாக தென்படப்போகின்றது.

ஆகவே என்னை பொறுத்தவரையில் பெரும்பாலான பொருளியலாளர்களின் கருத்துக்களும் அவ்வாறு தான் இருக்கும். அதாவது இந்த நலிந்து போகின்ற அந்நிய செலாவாணியின் விகிதத்தின் அடிப்படை சீனா இலாபகரமான தொழில் முயற்சியை இங்கு நடத்துகின்றது. இதில் பெருமளவில் பாதிக்கப்படப்போவது அப்பாவி மக்களே. இந்த அப்பாவி மக்கள் எல்லாம் சீனாவினுடைய அடிமை தொழிலாளிகள் வெளி நாட்டு முதலீட்டாளர்களின் அடிமைத் தொழிலாளர்களாக எமது நாட்டு மக்கள் மாறக்கூடிய சந்தர்ப்பம் இதிலிருக்கின்றது.

ஆகவே இந்த கொரோனா வைரஸின் தாக்கத்தினால் மக்கள் துன்பத்தை அனுபவிக்கின்ற அதே வேளை இந்த அந்நிய முதலீட்டு சக்திகள் எந்தளவு இலங்கையை பயன்படுத்தப் போகின்றது என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒரு விடயமாகும்.

**கேள்வி : இதிலொரு விடயமாக கொரோனா வைரஸை பரப்பிய சீனாவினுடைய வுகான் நகரத்திலே கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் வரை கொலை செய்துவிட்டதாகத் தான் தொலைக்காட்சிகளிலே பார்த்தோம். அந்த ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருந்தார்கள். கொரோனா வைரஸை பரப்பிய சீனாவை நட்புறவு நாடாக இலங்கை ஏற்றுக்கொண்டு தொடர்ந்தும் பயணிப்பதாவது மிகவும் ஒரு ஆபத்தான சூழ்நிலையை ஏற்படுத்தும் அல்லவா?**

பதில் : இலங்கை தற்பொழுது கையேறு நிலையில் இருக்கின்ற ஒரு நாடு. இலங்கைக்கு தற்பொழுது சீனா மாத்திரம் தான் இலங்கைக்கு கூடுதல் நிதியை வழங்கிக்கொண்டிருக்கின்றது. ஆகவே நிதிகளை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை சீனா எந்த தவறு விட்டாலும் என்ன மனித உரிமைத் மீறல்கள் நடந்தாலும்கூட எதிர்த்து கதைக்க முடியாத ஒரு நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

**நேர்காணல் : இரணியன்**

**தொடரும்...**

# விடுதலைப்புலிகளுக்கும் சீனாவிற்குமிடையிலான ஒப்பந்தம்

ஒரு சிறு கைத்துப்பாக்கியுடன் தாம் வரித்துக்கொண்ட இலட்சியத்திற்காக 40 வருடங்கள் இடையறாது போராடி உலகிலேயே முதன்மையான ஒரு விடுதலை இயக்கமாக வியாபித்திருந்த விடுதலைப்புலிகள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் தோற்கடிக்கப்பட்டார்கள்.பல இன்னல்கள், சவால்கள் தடைக்கற்கள் துரோகங்கள், பின்னடைவுகள், சர்வதேச தலையீடுகள் இவை அனைத்தையும் தவிடுபொடியாக்கி முன்னேறிய தேசியத் தலைவர் சர்வதேச நியாயத்தின் அடிப்படையில் குறிப்பாக இந்தியாவின் நலன் சார்ந்து பயணித்ததால் தோற்கடிக்கப்பட்டாரா?

2000 ஆம் ஆண்டு ஓயாத அலைகள் -3 என்ற படை நடவடிக்கையினூடாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கத்தோடு புலிகள் அதிவேகமாக முன்னேறி யாழ்ப்பாணத்தின் நுழைவாயில்களான சாவகச்சேரி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, அரியாலை போன்ற இடங்களை தமதாக்கி முன்னேறிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்திய தலையீட்டினால் அந்த படைநடவடிக்கை நிறுத்தப்பட்டது யாவரும் அறிந்ததே. இந்த ராணுவ ரீதியிலான வெற்றிக்கு பெரும் பலம் சேர்த்தது சீனாவிடமிருந்து விடுதலைப்புலிகள் பெற்றுக்கொண்ட ஆட்லறி மற்றும் பல்குழல் எறிகணை பீரங்கிகள். ஆட்லறிப்பீரங்கிகள் இரண்டை முல்லைத்தீவு இராணுவமும் தகர்ப்பின் மூலம் முதலில் பெற்றுக்கொண்ட புலிகள் மேலதிகமான ஆட்லறிகளையும் எறிகணைகளையும் சீனாவிடமிருந்து பெற்றனர்.விடுதலைப் புலிகளின் வீரத்திற்கும், தீரத்திற்கும், வேகத்திற்கும் ஈடுகொடுக்க முடியாத இலங்கை ராணுவப்படைகள் தென்மாராட்சியில் இருந்து ஆயுதங்களைப் போட்டுவிட்டு கோப்பாய் தரவையின் ஊடாக வலிகாமத்தை நோக்கி ஓடத் தொடங்கியது. அந்த சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த பல ராணுவ அதிகாரிகள் தங்களுக்கு அறிமுகமான பல தமிழர்களிடம் சென்று தங்கள் உயிரை காப்பாற்ற வேண்டும் என வேண்டியிருந்தார்கள். அத்தனை தூரம் விடுதலைப் புலிகளின் தாக்குதல் தீவிரமாகவும், வேகமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்த எனது பால்ய சிநேகிதன் ஒருவரின் வீடு தேடி வந்த கப்டன் தரத்திலான ராணுவ அதிகாரி ஒருவர் வலிகாமத்தை புலிகள் கைப்பற்றும் பட்சத்தில் தன்னை காப்பாற்ற வேண்டும் என தன்னைக் கேட்டிருந்ததாக நண்பன் கூறியிருந்தார். அதேபோல் கோப்பாய்,நீர்வேலி, உரும்பிராய் பிரதேசங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பலர் தமது காணிகளினூடே இராணுவத்தினர் சாரைசாரையாக வலிகாமம் நோக்கி ஓடியதாகக் கூறியிருந்தனர்.

யாழ் செல்லும் படையணி என்ற ஒரு தனி படைப்பிரிவை உருவாக்கி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் படை நடவடிக்கையை முடுக்கி விட்டிருந்தார் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். ஆனையிறவு என்ற பெரும் படைத்தளம் வீழ்ந்ததைத் தொடர்ந்து உளவியல் ரீதியாகவே தோற்றுப்போன மனநிலையில் இருந்த இலங்கை இராணுவத்தினருக்கு தொடர்ச்சியாக கண்ணிமைக்கும் நேரத்திலே பல காவலரண்களையும், வீழ்த்தியபடி வலிகாமம் நோக்கிய விடுதலைப்புலிகளின் பாச்சல் பெரும்பீதியைக்கொடுத்தது. குறிப்பாக கண்ணுக்கெட்டிய தூரம் வரை விடுதலைப்புலிகளை காணாத போதும் அவர்கள் ஏவிய துல்லியமான எறிகணைத் தாக்குதலில் தமது சகாக்கள் சிதறிச்சின்னாபின்பட்டு மடிவதைக்கண்ட ராணுவத்தினர் மரணபீதியின் நிமித்தம் தப்பியோடத் தலைப்பட்டனர். இன்னும் ஓரிரு வாரங்களில் விடுதலைப் புலிகள் முற்றாக வலிகாமத்தை கைப்பற்றிவிடுவார்கள் பலாலி ராணுவ முகாம் உட்பட என்ற நிலை காணப்பட்டது.

சந்திரிக்கா அரசானது அவசர அவசரமாக இந்திய அரசின் துணையை நாடியது. ஏற்கனவே இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக தமது கைகளை சுட்டுக் கொண்ட இந்தியாவானது ஆரம்பத்தில் இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடுவதற்கு தயங்கி நின்ற போதும் பின்னர் தமது தொடர்புகளினூடே விடுதலைப் புலிகளை தொடர்பு கொண்ட இந்திய அரசு இலங்கை ராணுவப் படைகளை மீட்பதற்கு பேரம் பேசியது. இதன்போது விடுதலைப்புலிகள் "இலங்கை ராணுவத்தினர் எந்த ஒரு ஆயுத தளபாடங்களையும் ஏற்றிக் கொண்டு செல்ல முடியாது" என்றும் "இந்திய படையானது தமது கப்பலை விட்டு தரையிறங்கக்கூடாது" என்றும் நிபந்தனைகளை விதித்து இருந்தார்கள். இவ்வாறான பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இலங்கையின் வெளியுறவு அமைச்சராக பணியாற்றிய யாழ்ப்பாணம் மானிப்பாயில் பிறந்த தமிழரான "லக்ஷ்மன் கதிர்காமர்" அவர்கள் சர்வதேச ரீதியில் தான் கொண்டிருந்த செல்வாக்கு, மற்றும் வெளியுறவுக் கொள்கையில் கொண்டிருந்த புலமை காரணமாக இந்தியாவிடம் சில அழுத்தங்களை பிரயோகித்தார். இந்தியா தலையிட தயங்கும் பட்சத்தில் சர்வதேச நாடுகளின் படைஉதவியை கோரப் போவதாகவும் கூறியிருந்தார். குறிப்பாக அமெரிக்கா அல்லது சீனா நாடுகளின் படை உதவியை கோருவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறியிருந்தார். இதனை விரும்பாத இந்தியா "யாழ்ப்பாணத்தைக்கைப்பற்றும் படை நடவடிக்கையை புலிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், மறுக்கும் பட்சத்தில் இந்திய ராணுவம் இலங்கை ராணுவத்திற்கு ஆதரவாக தரையிறக்கம் செய்யப்படும்" என்றும் தெரிவித்தது. நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து கொண்ட விடுதலைப்புலிகள் உடனடியாகவே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் படை நடவடிக்கையை முற்றாக நிறுத்தினர்.

இன்று ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற நிகழ்வு போன்று 2000ஆம் ஆண்டு தமிழீழ நிலப்பரப்பில் நடைபெற இருந்த நிகழ்வு லக்ஸமன்கதிர்காமரால் தடுத்து நிறுத்தப்பட்டது. (12-08-2005 அன்று கொழும்பில் தனது இல்லத்தில் நீச்சல்தடாகம் அருகே குறிசுட்டுத் தாக்குதலால்(sniper) லக்ஸமன் கதிர்காமர் அவர்கள் கொல்லப்பட்டார்.)
யாழ்மீட்பு நடவடிக்கை இந்தியத்தலையீட்டால் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தான் ஒரு பெரிய பேரம் /Deal ஒன்று விடுதலைப் புலிகளை தேடி வந்தது.

ஏற்கனவே சீனாவிடமிருந்து மறைமுகமாக பல லட்சம் டொலர் பெறுமதியான ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கறுப்புச்சந்தையிலே பெற்றுக் கொண்டிருந்தார்கள். ஒப்பீட்டுரீதியில் சீன தயாரிப்பு ஆயுதங்கள் மிக மலிவாக கிடைக்கப் பெற ஆரம்பித்த காலத்திலிருந்து விடுதலைப்புலிகள் சீனாவிடமிருந்து/ சீனத்தயாரிப்பு ஆயுதங்களை வாங்கத் தொடங்கியிருந்தனர்.இது அமெரிக்காவிற்கு பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் எப்பொழுதும் நவீனரக ஆயுதங்களை பெறுவதிலும் அதனைக் கொண்டு புதிய உத்திகளைப்பயன்படுத்தித் தாக்குதல்களை செய்வதிலும் ஆர்வம் காட்டி வந்தார். குறிப்பாக இந்திய இலங்கை ஒப்பந்த காலப்பகுதியில் இந்திய அரசின் இராணுவ படையானது SLR,SMG போன்ற பழைய ரகமான ஆயுதங்களை பாவிக்கும் பொழுது (அது மிகவும் பாரம் கொண்ட,பழைய ஆயுதங்களாகவும் வினைத்திறனற்றவையாகவும் இருந்தன) பாரமற்ற இலகுவாக கையாளக்கூடிய நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய,வினைத்திறன் மிக்க AK47,T56 போன்ற ஆயுதங்களை விடுதலைப்புலிகள் பாவனையில் வைத்திருந்தார்கள். இதே போன்று இலங்கை ராணுவத்தினர் பாவிக்காத பல நவீனஆயுதங்களை விடுதலைப் புலிகளே முதலில் பாவனையில் கொண்டு வந்திருந்தார்கள். அந்தவகையில் சிறியரக பல்குழல் எறிகணை ஆயுதங்களை முதலில் இலங்கை யுத்த அரங்கில் அறிமுகப்படுத்தியவர்களும் விடுதலைப்புலிகளே. குறிப்பாக யாழ்பாண மீட்புயுத்தத்தில் இவை தாராளமாக பயன்படுத்தப்பட்டதாகத் தகவல்கள் உண்டு.

விடுதலைப்புலிகளுக்கும் சீனஅரசுக்கும் எந்தவிதமான நேரடி தொடர்பும் கொண்டிராத நிலையில் இதே முகவர்களின் ஊடாக சீனா அரசு ஒரு யோசனையை புலிகளின் தலைமைக்கு முன்வைத்தது. அது என்னவெனில், நாம் உங்களுக்கு தேவையான அதிநவீன ஆயுத தளபாடங்களை இலவசமாகவும், போதியளவும் வழங்குகிறோம். நீங்கள் முழுமையாக உங்கள் நிலங்களை மீட்டு எடுக்கும் பட்சத்தில் உங்கள் தனி நாட்டிற்கான அங்கீகாரத்தையும் தருகிறோம்.(தற்சமயம் சீனாவின், தலிபான்கள் சார்ந்த நிலைப்பாட்டை எடுத்ததைப்போல) அதற்குப்பதிலீடாக நீங்கள் எங்களுக்கு உங்கள் திருகோணமலை துறைமுகத்தை தர வேண்டும் என்பதே அந்த வேண்டுகோள். விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் ஊடாக கசிந்த இந்த தகவலானது பின்நாட்களில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்களால் பகிரங்கமாகவே பலமேடைகளில் கூறப்பட்டது.

என்ன பதில் அளித்தார் மேதகு ? சீனாவின் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டாரா? என்பதை பார்க்க முன்னர் சீனா ஏன் இவ்வாறான ஒரு சலுகையை விடுதலைப்புலிகளுக்கு வழங்க முன்வந்தது என்பதைப்பார்ப்போம்.

1.ஏற்கனவே விடுதலைப்புலிகள் சீனாவிலிருந்து முகவர்கள் மூலம் ஆயுதங்களைப் பெற்று கொண்டிருப்பதனால் அவர்கள் குறித்தும்,அவர்களின் தேவைகள் குறித்தும் நன்கறிந்திருந்தது சீனா

2. தமிழீழம் என்று அழைக்கப்படும் நிலப்பரப்பின் பெரும் பங்கை ஏற்கனவே விடுதலைப்புலிகள் மீட்டிருந்தார்கள். ஒரு சிறு ஒத்தாசை இருப்பின் விடுதலைப் புலிகள் மிக வேகமாக தமது தனி நாட்டிற்கான நிலப்பரப்பை மீட்டு விடுவார்கள்.

3. விடுதலைப் புலிகளால் மீட்கப்படும் நிலப்பரப்பிற்கு ஒரு சுதந்திரத் தனி நாட்டிற்கான அங்கீகாரம் ஒன்று அவசியமாய் இருந்தமை

4. ரஜீவ் காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பாக இந்தியாவால் தடை செய்யப்பட்டது. இந்தியாவை எதிர்த்து எந்த ஒரு நாடும் புலிகளின் தனிநாட்டிற்கு அங்கீகாரம் அளிக்க முன்வரப் போவதில்லை

5. 2050ஆம் ஆண்டில் உலகின் அதிசக்திவாய்ந்த ஒரு வல்லாதிக்க அரசாகத்தான் மாறவேண்டும் என்ற சீனாவின் கனவிற்கு இந்து சமுத்திரப் பிராந்தியம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. பட்டுப்பாதை திட்டம், முத்துமாலை திட்டம் போன்றவற்றிற்கும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை பரப்புவதற்கும் அங்கே ஒரு தளம் மிக அவசியமாக இருந்தது. இலங்கையின் கேந்திர முக்கியத்துவமும், குறிப்பாக திருகோணமலையில் காணப்படும் இயற்கை துறைமுகமும் இதற்கான வழியை வகுத்துக் கொடுக்கும் என சீனா நம்பியது.

6.விடுதலைப் புலிகளின் கடற்படைப் பலமும் அதன் வளர்ச்சியும் சீனாவிற்கு சாதகமாக அமையும் என அது நம்பியது.

7.விடுதலைப்புலிகள் தமிழீழத்தை ஒரு சோசலிச குடியரசாக அமைப்பதற்கு முனைகிறார்கள் என்பதும் விடுதலைப் புலிகள் ஏற்கனவே தமது கொள்கைகளில் இறுக்கமான பற்றுக் கொண்டவர்கள் என்பதனாலும் ஒரு சீன சார்புக் கொள்கையை ஏற்றுக்கொள்வார்கள் எனவும் நம்பியது.

இதனால்தான் சீனா புலிகளை நாடியது. ஏன் இலங்கை அரசின் ஊடாக சீனா தனக்கான தளத்தை பெற முற்படவில்லை? என்ற கேள்வி எழாமல் இல்லை. அதற்கான காரணங்கள் இங்கே பட்டியலிடப்படுகிறது.

**தொடரும்...**

**சி.சிறீக்குமார்**




# பிராந்திய செய்திகள்



## வவுனியா உட்பட 14 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சிவப்பு எச்சரிக்கை!!

இலங்கையின் 14 மாவட்டங்களுக்கு இடி.மழையுடன் கூடிய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி, வடக்கு, வட-மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது திடீர் காற்றும் வீசக்கூடும். எனவே, பொது மக்கள் புயல் மற்றும் மின்னலுக்கு எதிராக தங்களை பாதுகாத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அனுராதபுரம், திருகோணமலை, பொலன்னறுவை, மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, பதுளை, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கே சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## மேலும் ஒரு தொகை உலர்ந்த மஞ்சளுடன் 2 சந்தேகநபர்கள் கைது

நீர்கொழும்பு மா ஓயா நீரேந்துப் பகுதியில் அன்றைய தினம் (16) முன்னெடுக்கப்பட்ட விஷேட சோதனை நடவடிக்கையின் போது, நாட்டிற்குள் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பாரியளவிலான (1,162 கிலோ கிராமிற்கும் அதிகம்) உலர்ந்த மஞ்சள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.




இதன்போது கடத்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட இரண்டு படகுகள் சகிதம் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை கொவிட்-19 பரவலை தடுக்கும் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய இடம்பெற்றது.

இந்த நடவடிக்கையின்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், நீர்கொழும்பில் வசிப்பிடமாக கொண்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் சகிதம் சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க, சுங்க திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யாழ்ப்பாணம்- கோப்பாய் பகுதியில் விபத்து: ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்- கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில், அன்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கை மின்சாரசபை வாகனமும் முச்சக்கர வண்டியும் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்புக்கு அனுமதி மறுப்பு

எதிர்வரும் நாட்களில் கொரோனா நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவது குறித்து பரிசீலிக்கப்படலாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியக் கலாநிதி அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி முதல் 3 நாட்களுக்கு நடத்துவதற்கு அனுமதி கோரி யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரால் அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைக்கான பதில் கடிதத்திலேயே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியக் கலாநிதி அசேல குணவர்த்தன இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியக் கலாநிதி அசேல குணவர்த்தன, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது, "நாட்டில் தற்போது விதிக்கப்பட்டுள்ள கொவிட் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய அனைத்து விதமான ஒன்று கூடல்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளன. ஆகவே, தங்களின் கோரிக்கையின் படி நிகழ்வை நடத்துவதற்கு அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இருப்பினும் எதிர் வரும் நாட்களில் கொரோனா நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவது பற்றி அன்றைய நாளில் சாதகமாகப் பரிசீலிக்கப்படலாம். மேலும், பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்கு ஆட்சேபனை ஏதுமில்லை" என அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.





# சினிமா துளிகள்



## மும்பையில் சொகுசு பங்களா வாங்கிய தீபிகா படுகோனே

நடிகை தீபிகா படுகோனேவுக்கும், நடிகர் ரன்வீர் சிங்குக்கும் மும்பை, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களிலும் சொத்துக்கள் உள்ளன.

பாலிவுட் திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் தீபிகா படுகோனே. இவர் நடிகர் ரன்வீர் சிங்கை காதலித்து திருமணம் செய்து கொண்டார். திருமணத்துக்கு பின்னரும் இருவரும் படங்களில் பிசியாக நடித்து வருகின்றனர். இந்நிலையில், தீபிகா படுகோனே - ரன்வீர் சிங் தம்பதி மும்பையில் உள்ள அலிபாக் பகுதியில் சொகுசு பங்களா ஒன்றை வாங்கி உள்ளனர். இதன் மதிப்பு ரூ.22 கோடியாம்.

கடற்கரை பகுதியில் இந்த இடம் அமைந்துள்ளதால், பல தொழிலதிபர்களும், திரை நட்சத்திரங்களும் இந்தப் பகுதியில் சொத்துக்களை வாங்கி வருகின்றனர். நடிகை தீபிகா படுகோனேவும், நடிகர் ரன்வீர் சிங்கும் தற்போது மும்பையில் உள்ள பிரபாதேவி பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருகின்றனர். இது தவிர இவர்களுக்கு மும்பை, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களிலும் சொத்துக்கள் உள்ளன.



## அட்லீ இயக்கத்தில் உருவாகி வரும் புதிய படத்தில் ஷாருக்கானுக்கு ஜோடியாக நடிகை நயன்தாரா

அட்லீ இயக்கத்தில் உருவாகி வரும் புதிய படத்தில் ஷாருக்கானுக்கு ஜோடியாக நடிகை நயன்தாரா நடித்து வருகிறார்.

தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வரும் அட்லீ, அடுத்ததாக பாலிவுட்டில் அறிமுகமாக உள்ளார். அவர் இயக்கும் இந்தி படத்தில் ஷாருக்கான் ஹீரோவாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடித்து வருகிறார்.



மேலும் பிரியாமணி, யோகிபாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அதிரடி ஆக்ஷன் கதையம்சம் கொண்ட இப்படத்தை ரெட் சில்லீஸ் நிறுவனம் பிரம்மாண்ட பட்ஜெட்டில் தயாரித்து வருகிறது.

இந்நிலையில், இப்படத்தின் தலைப்பு குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி இப்படத்திற்கு 'லயன்' என தலைப்பு வைக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. முன்னதாக இப்படத்திற்கு ஜவான் என தலைப்பு வைக்கப்பட்டு இருப்பதாக தகவல் பரவி வந்த நிலையில், தற்போது லயன் என தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக பாலிவுட் வட்டாரத்தில் தகவல் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## அரண்மனை - 3 படத்தின் ரிலீஸ் திகதி அறிவிப்பு




சுந்தர்.சி இயக்கத்தில் உருவாகி உள்ள 'அரண்மனை 3' படத்தின் வெளியீட்டு உரிமையை உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவீஸ் நிறுவனம் கைப்பற்றியுள்ளது. சுந்தர்.சி இயக்கத்தில் வெளியான அரண்மனை படத்தின் 2 பாகங்களும் நல்ல வரவேற்பை பெற்றதோடு, வசூலிலும் பல்வேறு சாதனைகளை படைத்தது. தற்போது அரண்மனை படத்தின் 3-ம் பாகம் தயாராகி உள்ளது. இப்படத்தையும் சுந்தர்.சி தான் இயக்கி உள்ளார். இதில் கதாநாயகனாக ஆர்யாவும், அவருக்கு ஜோடியாக ராஷி கண்ணா, ஆண்ட்ரியா, சாக்ஷி அகர்வால் ஆகிய 3 கதாநாயகிகள் நடித்துள்ளனர். மேலும் விவேக், யோகிபாபு ஆகியோர் காமெடி வேடங்களில் வருகின்றனர். இப்படத்திற்கு சத்யா இசையமைத்துள்ளார்.

இந்நிலையில், 'அரண்மனை 3' படத்தின் வெளியீட்டு உரிமையை உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவீஸ் நிறுவனம் கைப்பற்றியுள்ளது. மேலும், இப்படத்தின் ரிலீஸ் திகதியும் அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி இப்படம் வருகிற அக்டோபர் 14-ந் திகதி ஆயுதபூஜை பண்டிகையன்று திரையரங்குகளில் வெளியிடப்படும் என அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.


## நடிகை காஜல் அகர்வால் கர்ப்பம்?

தமிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் காஜல் அகர்வால், சினிமாவில் இருந்து தற்காலிக ஓய்வு எடுத்து இருப்பதாக கூறப்படுகிறது.


தொழில் அதிபர் கவுதம் கிச்சலுவை கடந்தாண்டு காதல் திருமணம் செய்து கொண்ட நடிகை காஜல் அகர்வால், திருமணத்துக்கு பிறகும் படங்களில் பிசியாக நடித்து வருகிறார். தற்போது இவர் கைவசம் பாரிஸ் பாரிஸ், கோஸ்டி, ஹேய் சினாமிகா, கமலுடன் இந்தியன் 2, தெலுங்கில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக ஆச்சார்யா ஆகிய படங்கள் உள்ளன. இதுதவிர உமா என்கிற பாலிவுட் படத்திலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில், 36 வயதாகும் நடிகை காஜல் அகர்வால் கர்ப்பமாக இருப்பதாக டோலிவுட் வட்டாரத்தில் செய்திகள் வலம் வருகிறது. இதையடுத்து ரசிகர்கள் பலரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். மேலும் காஜல் அகர்வால் தற்போது சினிமாவில் இருந்து தற்காலிக ஓய்வு எடுத்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும் காஜல் அகர்வால் தரப்பில் இதற்கு எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் மவுனம் காத்து வருகின்றனர்.





# பல்சுவை கதம்பம்



## உதடுகளின் வெடிப்பை போக்க...



படுப்பதற்கு முன்பு பாலேட்டை சிறிதளவு எடுத்து உதட்டில் தடவ வேண்டும். அப்படியே மறுநாள் காலையில் எழுந்து பார்த்தால் காய்ந்த நிலையில் இருக்கும் பாலேட்டை சிறிதளவு காட்டனில் பன்னீரை நனைத்து துடைக்கவும். பீட்ரூட் காய்களை நறுக்கும்போது அதன் தோலை நாம் நீக்குவோம். அந்த தோலை உதட்டில் தேய்த்தால் நாளடைவில் உதட்டில் உள்ள வெடிப்பு நீங்கி ரோஜா இதழ்கள் போல் நிறம் மாறி உதடுகள் மென்மையாக காணப்படும்.

## வரண்ட சருமத்திற்கு...



அதிகமாய் வறண்டு போன சருமத்துக்கு தேன் கலந்த முக பேக் நல்லது. இரண்டு ஸ்பூன் தேனில் சிறிதளவு முல்தானிமெட்டி பவுடர் போட்டு நன்றாக பேஸ்ட் போல் குழைத்துவிடவும். இந்த கலவையை முகத்தில் தடவி சிறிது நேரம் ஊறவிடுங்கள். படுப்பதற்கு முன்பு வஸ்லின் அல்லது வெதுவெதுப்பான தேங்காய்ப்பால் எடுத்து முகத்தில் தடவி 15 நிமிடம் மசாஜ் செய்யவும். பின்னர் வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவ வேண்டும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால் வறண்ட சருமம் நீங்கி முகம் மென்மையாக மாறும்.

## முகத்தில் எண்ணெய் வழிவதை தடுக்க சில குறிப்புகள்



கற்றாழை
கற்றாழை ஜெல்லை முகத்தில் தடவி சிறிது நேரம் ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவ முகம் பளிச் சென்று இருக்கும்

வெள்ளரிக்காய்
வெள்ளரிக்காயை துருவி அதில் தயிர் சேர்த்து கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் கழுவ முகத் தில் உள்ள எண்ணெய் பசை மட்டுமின்றி அழுக்குகளும் முழுவதுமாக நீக்கப்படும்.

ஐஸ்
ஐஸ் நீர் அல்லது ஐஸ் கட்டி களைக் கொண்டு முகத்தை சிறிது நேரம் மசாஜ் செய்து வர முகத்தில் உள்ள அழுக்குகள் நீக்கப்படுவதோடு சருமத் துளைகள் இறுக்கப்பட்டு எண் ணெய் பசை வெளிவருவதைத் தடுக்கலாம்.

## கூந்தல் பராமரிப்பு...

குளிர் காலங்களில் கூந்தல் வறண்டு காணப்படும். எனவே, கூந்தலில் கற்றாழை சாறு தடவி சில நிமிடங்கள் கழித்து மசாஜ் செய்யலாம். இதனால் கூந்தல் மென்மையாக இருக்கும்.

வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை ஆலிவ் எண்ணெய் தடவலாம். இதனால் கூந்தலின் ஈரத்தன்மை வலுவடையும். எண் ணெய் சூடுபடுத்தி தலையில் தேய்த்து குறைந்த நேரம் ஊறவிட்டு குளிக்கலாம்.

அதேபோல், மூலிகை சாறு ஏதேனும் தலையில் தேய்ப்பதாக இருந்தாலும், அவற்றை அதிக நேரம் ஊறவிடக்கூடாது. மூலிகை சாறுகள் பெரும்பாலும் குளிர்ச்சி உடையவை. அவை வெயில் காலங்களுக்கே ஏற்றது. குளிர் காலங்களில் கூந்தலை ப்ரீ ஹேர் விடுவதை தவிர்த்து பின்னுவது நல்லது. இது குளிர்ந்த காற்றில் கூந்தல் வறண்டு போவதை தவிர்க்கும்.



## கால்களில் உள்ள வெடிப்புக்கள் நீங்க...

காலில் பித்த வெடிப்பு இருந்தால் எலுமிச்சைச் சாறு, சிறிதளவு உப்பு கலந்த வெதுவெதுப்பான நீரில் காலை வைத்தால் பித்த வெடிப்பு, கால் வலி நீங்கிவிடும்.

அல்லது வெதுவெதுப்பான நீரில் தேங்காய்ப்பால் சிறிதளவு, ரோஜா இதழ்கள், ரோஸ் வாட்டர், உப்பு, ஆகியவற்றை கலந்து அதில் கால்களை முழங்கால் வரை விட்டு 15 நிமிடம் ஊற விடவும்.

பின்னர் குளிர்ந்த நீர்க்கட்டி (ஐஸ் ஸ்கியூப்) கொண்டு பாதத்திலி ருந்து முழங்கால் வரை மசாஜ் செய்யவும். இப்படி தொடர்ந்து செய்வதால் நாளடைவில் வெடிப்பு நீங்கி பூ போன்ற பாதங்களாக மாறும்.



04 ஆம் பக்க தொடர்ச்சி...

எமது ஜனநாயக மரபுகளை நாம் உறுதியாகப் பேணி வந்தோம் - மிகவும் அண்மையில் இடம்பெற்ற 2019ஆம் ஆண்டில் ஜனாதிபதித்தேர்தல் மற்றும் 2020ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல்களில், அதிக அளவிலான வாக்காளர்களின் பங்கேற்புடன் வழக்கமான இடைவெளியில் தேர்தல்கள் நடாத்தப்பட்டன. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடாத்துவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

குணப்படுத்துதல் என்ற கண்ணோட்டத்தில் மோதலுக்குப் பிந்தைய மீட்பு நடவடிக்கைகளக் கையாள்கின்றோம். மிகவும் அண்மையில், தீவிரமான பயங்கரவாதக் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட 16 விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதியனால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. மோதலுக்குப் பிந்தைய கண்ணிவெடி அகற்றல், புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களின் வெற்றியானது, தேசிய நல்லிணக்கத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

பேரழிவுகளை ஏற்படுத்தும் கொவிட்-19 தொற்று நோயின் நாளாந்த சவால்கள் இருந்தபோதிலும், உள்நாட்டு செயன்முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை நான் முன்னிலைப்படுத்துகின்றேன்:

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் அதன் முக்கிய செயற்பாடாக, ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து காணாமல் போனவர்களின் பட்டியலை இறுதி செய்கின்றது.

இழப்பீட்டு அலுவலகம் இந்த ஆண்டு 3775 கோரிக்கைகளை செயலாக்கியுள்ளது.தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் அதன் 8 அம்ச செயற்றிட்டத்தைத் தொடர்கின்றது.தேசியமனிதஉரிமைகள் ஆணைக்குழு அதன் ஆணையை நிறைவேற்றுகின்றது.

நிலையான அபிவிருத்தி இலக்கு 16 இன் கீழான வழிநடத்தல் குழுவொன்று சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கும், சர்வ தேச விதிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப கொண்டுவரவும் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. இம்மாத இறுதியில் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள வழக்குகளை விசாரணை செய்யவும், இதுபோன்ற வழக்குகளை விரைவாக சமாளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்கவும் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விரைந்து தீர்ப்பதும் நடைபெற்று வருகின்றது.

பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், முந்தைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்வதற்காகவும் உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

விசாரணை ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது. இறுதி அறிக்கை அடுத்த 06 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும். நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு, நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும், ஆதரவைப் பயன்படுத்துவதற்கும் நாங்கள் சிவில் சமூகத்துடன் தீவிரமான ஈடுபாட்டைப் பராமரிக்கின்றோம்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினம் அன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் குற்றவாளிகள் மீது இலங்கை தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து, அனைத்து விதமான சட்ட நடைமுறைகளையும் பின்பற்றி வருகின்றது. பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதிலும், அனைத்து மதங்களைச் சார்ந்த இலங்கையர்களைப் பாதுகாப்பதிலும் எப்போதும் போல நாம் விழிப்புடன் இருப்போம்.

தீர்மானம் 46/1 ஆல் நிறுவப்பட்ட எந்தவொரு வெளிப்புற முன்முயற்சிகளுக்கான முன்மொழிவை நாங்கள் நிராகரிக்கும் அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட விடயங்களில் உள்நாட்டு செயன்முறைகள் கையாளப்படுகின்றன. தீர்மானம் 30/1 இனால் நாங்கள் அனுபவித்தபடி இது எமது சமூகத்தைத் துருவப்படுத்திவிடும். மனித உரிமைகள் பேரவை அதன் ஸ்தாபகக் கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் தொடங்கப்பட்ட வெளிப்புற முயற்சிகளால் அந்த நாட்டினால் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது என்பதுடன், அது அரசியல்மயமாக்கலுக்கு உட்படுத்தப்படும். குறிப்பாக உலகின் பல பகுதிகளில் மனிதாபிமான மற்றும் ஏனைய ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக அவை அவசரமாகத் தேவைப்படும் போது, இந்த முயற்சியில் செலவிடப்பட்ட வளங்கள் தேவையற்றவை.

கொவிட்-19 தொற்றுநோயின் தற்போதைய மற்றும் அழுத்தமான சவால்களின் கீழ், சமூக வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதை அரசாங்கத்தின் அடிப்படைக் கடமையாக நாங்கள் கருதுகின்றோம். எமது சவால்களை ஒப்புக்கொள்வதில் நாம் வெளிப்படையாக இருக்கின்றோம். பொறுப்பான மற்றும் ஜனநாயக அரசாங்கமாக, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான முழு அளவிலான பிரச்சினைகளில் உறுதியான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எனவும் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானம் தொடர்பாக ஐக்கிய நாடுகளுடன் இலங்கை தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் தாம் முன்வைத்த அறிக்கை ஒன்றில் ஐரோப்பிய ஒன்றியம் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 46/1 இன்படி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கான தொடர்ச்சியான முயற்சிகளின் தேவை குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு, ஐக்கிய நாடுகள் கட்டமைப்பை ஆதரிக்காத அரசாங்கத்தின் முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வருத்தம் தெரிவித்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ள ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச விதிமுறைகள் மற்றும் மனித உரிமை நியமங்களுக்கு ஏற்ப அது அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை 46/1தீர்மானம் தொடர்பாக ஐக்கிய நாடுகளுடன் தொடர்ந்து ஈடுபாடுடன் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தாலும் இலங்கை தொடர்பாக மனித உரிமை ஆணையாளர் வைத்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரித்ததோடு- தமது நாடு குறித்து வெளிபுற தலையீடுகளுக்கு இடமில்லை என்றும் உள்நாடு செயன்முறை கையாளப்படும் என கூறப்பட்டிருக்கின்ற கருத்தானது இலங்கையில் தமிழர்களுக்கான தீர்வினை பெற்று தருமா? என்பது இலங்கை வாழ் தமிழர்களிடையே கேள்வி குறியாக காணப்படுகின்றது.

தமிழ் தரப்பு கூறுகின்ற விடயங்களின் படி பயங்கராவாத தடைச்சட்டம் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் விடுதலை, நில ஆக்கிரப்பு,தமிழர் தாயகத்துக்கான அங்கீகாரம் யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டு கடந்த நிலையில் தீர்க்கப்பட வில்லை என்பது விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல அவர்கள் தமிழ் மக்கள் போராடியவர்கள் என்பது நிருபனமான ஒன்று ஆகவே தமிழ் மக்கள் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களது கோரிக்கை.



02ஆம் பக்க தொடர்ச்சி...

எனவே எது எவ்வாறாயினும் எங்களுடைய நாட்டை நாங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது. அந்த நாட்டை பாதுகாத்துக்கொள்ளுகின்ற பொழுது தான் நாங்கள் அடுத்தகட்ட நகர்வை செய்ய வேண்டும். இவர்கள் கொடுக்கின்ற ஊசிகளை பொருத்தவரை இதில் என்ன கெமிக்கல் கலந்திருக்கின்றது என்பதை யாரும் இதுவரை கண்டறியவில்லை.

ஏனென்றால் ஊசி போட்டவர்களும் இறந்துபோகின்றார்கள். ஊசி போட்டாதவர்களும் இறந்துபோகின்ற பொழுது அடுத்தகட்ட நகர்வுகள் எப்படி இருக்கப் போகின்றது. இன்று வருமானமற்ற ஒரு சூழலை உருவாக்கியுள்ளது. ஆர்.எம்.பி மூடப்பட்டுள்ளது வருமானத்தை கொடுக்கின்ற யூசியாக இருக்கலாம் நகரசபையாக இருக்கலாம் மின்சாரசபையாக இருக்கலாம் எதாயினும் இன்று பணம் இல்லை அவ்வாறிருந்தால் அரசாங்க பணிபுரிபவர்களிலே பலர் வேலை செய்யவில்லை ஆனால் அவர்களுக்குரிய சம்பளம் போடத்தான் வேண்டும். அரசாங்கம் படிப்படியாக இந்த கொரோனா வைரஸை பயன்படுத்தி சீனாவும் கடனை கொடுத்து கொண்டிருக்கின்றது. இந்தியாவிடம் கடனாக 400 பில்லியன் வாங்கப்பட்டிருந்தது அதையும் சீனாவிடமே வாங்கி அவர்கள் இந்தியாவிற்கு கொடுத்து விட்டார்கள். ஆனால் இன்று பணம் இல்லாமல் சோமாளியாவைவிட எதியோப்பியாவைவிட பிச்சைக்கார நாடாக இலங்கையை உருவாக்கியிருக்கின்றார்கள்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் போராட்டம் நடந்த காலகட்டத்தில் ஒரு தேங்காயின் விலை 1000 ரூபாய். ஒரு அங்கரின் விலை 5000 ரூபாய். ஒரு லக்ஸ்பிரேயின் விலை 3000 ரூபாய். இப்படித்தான் அந்த விலைகள் அங்கு இருந்தது. அப்படியிருக்கும் பொழுது எப்படி பொருளாதாரம் இருந்தது எப்படி அந்த பொருட்களை மக்கள் பெற்றுக் கொண்டார்கள் என்பதனை சற்று சிந்திக்க வேண்டும். தற்பொழுது ஒரு யுத்தம் இல்லை ஆனால் கொரோனாவிற்கு ஒரு அனர்த்தத்திற்கு முகம் கொடுக்க முடியாத அளவிற்கு இவர்கள் இருக்கின்றார்கள். ஏன் அதாவது இரட்டை குடியுரிமைகளை கொடுத்தால் 1 அரை 2 இலட்சம் மக்கள் இலங்கைக்கு திருப்பி வருவார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை போட்டுக்கொண்டு இருப்பதால் முழு முதலீடுகளும் வெளிநாடுகளிலே இன்று இருக்கின்றது வெளிநாடுகளிலே 24 மணிநேரமும் திறந்திருக்கின்ற கடைகள் செவன் லெவன் என்று கூறப்படுகின்ற இடத்திலே இருக்கின்றன. விடுதலைப்புலிகள் 17 க்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் வெளிநாடுகளிலே வைத்திருந்தார்கள். 25 க்கும் மேற்பட்ட சர்வதேச வியாபார கப்பல்கள் ஓடிச் சென்று வந்தன. அங்கு பொருட்கள் தட்டுப்பாடான நிலை ஏற்படவில்லை. ஆனால் இன்று ஒரு அனர்த்தத்திற்கு முகம் கொடுக்கமுடியாத அளவிற்கு இந்த இலங்கை அரசாங்கம் இருக்கின்றது என்றால் இது உண்மையிலே இந்த அரசாங்கத்தினுடைய பிழை. குடும்ப அரசியலின் பிழை என்று தான் கூறவேண்டும். சுனாமி வந்தபொழுதிலும் சுனாமி கட்டமைப்புடன் விடுதலைப்புலிகளும் சேர்ந்து அதை சீராக செய்துவிட்டார்கள். இன்று சுனாமி அடித்த இடமிருக்கின்றதா என்ற அளவிற்குகூட அந்த அடையாளம் இல்லாமல் அபிவிருத்தி செய்திருந்தார்கள்.

ஆகவே இந்த புலனாய்வாளர்களை நாட்டுக்குள் விட்டது எங்களது முதலாவது பிழை ஒரு பக்கம் இந்தியா எங்களை கையாண்டு தந்திரோபாயமாக பிரித்தது. அமெரிக்காவிற்கு லக்சபான சென்று தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்க ரவாதிகள் என்று கூறிய சந்திரிக்கா அம்மையாருடனும் இராஜதந்திர ரீதியாக செயற்பட்டார்கள். இன்று இந்தியாவிற்கு சீனா வருகின்ற பொழுது தமிழ் மக்களுக்கான சாதக பாதக தன்மையும் கூட உருவாக்கப்படும். ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே இலங்கை இருக்கின்ற பொழுது சீனா வந்திறங்கினால் இந்தியாவிற்கு ஆபத்து இருக்கின்றது. அதில் மாற்றுக்கருத்தில்லை.

இதிலிருந்து என்ன கூறவருகின்றேன் என்றால் இக்கட்டான சூழ்நிலையிலும் கூட எந்தவொரு பொருளும் அதாவது கற்பூரம். வெளிநாட்டு சாக்லெட்டுக்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஒரு பவுன் தங்க நகையை கொடுத்து அங்கர் வாங்கிய நிகழ்வுகளும் இடம்பெற்றிருக்கின்றது. அந்தளவிற்கு பொருளாதாரம் வன்னி பிரதேசத்திலே அரசாங்கம் போட்டு மிகவும் கீழ்த்தனமாக சென்றுகொண்டிருந்த பொழுதிலும்கூட அவ்வாறான நிலை இருந்தது. ஆகவே இரட்டை குடியுரிமை கொண்டவர்களை இங்கு கொண்டு வரலாம். டீ.ஆரோவை தடை செய்திருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என தடை செய்து அனைவரையும் எமது நாட்டுக்குள் உள்நுழையும் பொழுது எமது நாட்டை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இனியொரு போர் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. ஆகவே ஒரு அரசியல் ரீதியான தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கலாம். அவ்வாறு செய்யும் பொழுது இந்த நாடு எங்கோ சென்றுவிடும். இரட்டை குடியுரிமை கொண்டவர்களை இந்த நாட்டுக்குள் கொண்டு வாருங்கள். இன்று கனடாவிலே சுவிஸ் லண்டன் ஜேர்மன் பிரான்ஸ் என்று 120 க்கும் மேற்பட்ட நாடுகளிலே தமிழர்கள் இருக்கின்றார்கள். தமிழர்கள் அங்கிருக்கும் பொலிசாரினால் விரட்டியடிக்கப்பட்டு சென்று மலைநாடுகளிலே இருக்கின்றார்கள். அவர்களை அழைத்து எடுங்கள். யாழ்ப்பாணத் தை பொறுத்தவரையில் குட்டி சிங்கப்பூர் என்று அழைப்பார்கள். அந்தளவிற்கு இன்று யாழ்ப்பாணத்தில் நிலைமை இருக்கின்றது பொருளாதாரம் ரீதியிலே. காரணம் என்னவென்றால் எவ்வளவு தான் நடந்தாலும் அதை தாக்கிப்பிடிக்கும் சூழல் இருக்கின்றது.

எனவே இன்று பலாலி விமான நிலையத்திலே அனைத்து வசதிகளையும் செய்துவிட்டால் முழு சுற்றுலா துறைகளும் அங்கு வந்துவிடும். ஆகவே கட்டுநாயக்காவை மூட வேண்டிய தேவையிருக்கும். அடுத்து மத்தல விமானநிலையத்தையும் மூட வேண்டிய தேவையிருக்கும். எனவே அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் செயற்படுகின்றது. ஆகவே இரட்டை குடியுரிமையை கொடுத்தாவது இலங்கை மக்களை இந்த நாட்டுக்குள் எடுங்கள். இடம்பெயர்ந்து சென்று வைத்தியர்கள் இன்ஜினியர்ஸ் போன்றவர்களை நாட்டுக்குள் எடுங்கள். எங்களுடைய மருத்துவர்கள் அங்கு மருத்துவங்களை கண்டுபிடிக்கின்றார்கள், அங்கு சத்திர சிகிச்சைகளை செய்து வெற்றி காண்கின்றார்கள், அங்கு விமான ஓட்டுனர்களாக செயற்படுகின்றார்கள். ஏன் எங்களுடைய நாட்டிலே இந்த அரசாங்கம் இவ்வாறான செல்வாக்கை எமது மக்களுக்கு கொடுத்து இங்கு நிறுத்தக்கூடாது? இன்று எத்தனையோ மருத்துவர்கள் இந்த நாட்டிலிருந்து வெளியேறுக்கின்றார்கள், சத்திர சிகிச்சை நிபுணர்களாக வெளியேறுகின்றார்கள் யாழ்ப்பாணத்திலும் எத்தனையோ சத்திர சிகிச்சை நிபுணர்கள் வெளியேறிவிட்டார்கள். இதற்கெல்லாம் காரணம் இந்த அரசாங்கம் தான் அமெரிக்கா. கனடா. லண்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் வைத்தியர்கள் இன்ஜினியர்களை எடுத்து படிப்பிக்கும் அளவிற்கு இங்கு இல்லை. வெளிநாடுகளிற்கு சென்றவர்கள் பலர் அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். உயர் பதவிகளிலே இருக்கின்றார்கள். இங்கு ஒரு சயன்டிசை மட்டும் தான் இருக்கின்றார். இங்கு நாம் உற்பத்திகளை பிற நாடுகளிற்கு கொடுத்துவிட்டு அந்த அபிவிருத்தியில் சில விடயங்களை நாம் எடுத்து அவர்களுக்கு செயற்பாடுகளை செய்து கொடுக்கின்றோமே தவிர எங்களது நாட்டை வளர்ப்பதற்காக இந்த அரசாங்கம் முயற்சிகள் எடுக்கவில்லை.

எனவே இந்த அரசாங்கத்தை பொறுத்தவரையிலே ஒரு கட்டத்தில் கொரோனா வைரஸினுடைய தாக்கத்தின் ஊடாக இந்த அரசாங்கத்தை பொறுப்பேற்றது. போர்ட்சிற்றி வருவதால் பாரிய பிரச்சனைகள் ஏற்படப்போவதில்லை இருந்தும் அதனூடாக கறுப்பு பணத்தையும் இந்த நாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றது. சுவிஸ் நாட்டு வங்கிகளில் ஏன் பணத்தை போடுகின்றார்கள். ஏன் போடவேண்டிய தேவையிருக்கின்றது. ஆனால் இந்த அண்டவேல்ட்டுகளை அழித்தெரியும் முதலாவது இந்த அரசினுடைய பிழை எந்தவொரு அரசாங்கமும் தமக்கானவொரு அண்டவேல்ட்டை வைத்துக் கொண்டு தான் செயற்படுகின்றது அது உலகளாவிய ரீதியிலே ரிசேர்ஜ் அனலைஸ் ஊடாக பார்க்கலாம். இன்று லக்சரி தொய்பாவாக இருக்க லாம் அல்லது ஹமாசாக இருக்கலாம் எத்தனையோ தீவிரவாத அமைப்புக்கள் கூட இந்த நாட்டினுடைய அண்டவேல்டாக செயற்படுகின்றார்கள். ஒரு அண்டவேல்ட் இல்லாமல் ஒரு நாடு இயங்குவது மிகக்கடினம். ஆகவே இந்த அரசு தனியே வெறுமனே சீனாவை மட்டும் நம்பியிருப்பது மிகவும் ஒரு முட்டாள்தனமான விடயம் சீனா தனக்கான தெரிவுகளை எடுத்துவிட்டு இறுதியிலே இலங்கையை இந்த அரசாங்கம் போய் அடுத்த அரசாங்கம் வந்தாலும் இதே கடன் சுமையில் இறக்கிவைத்து பாரியதொரு விபரீதத்தை இந்த நாட்டிற்கு ஏற்படுத்தப்போகின்றது. முழுவதுமாக கெமிக்கல்களை எடுத்து தான் எங்களை கொல்லப்போகின்றார்கள் என்ற சந்தேகம் கூட தற்பொழுது வளர்ந்திருக்கின்றது.

ஆகவே இந்த அரசாங்கத்திற்கு ஒரு அன்பான வேண்டுகோளாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவுடனோ அல்லது பிரதமர் மகிந்த ராஜபக்சவுடனோ எங்க ளுடைய வடகிழக்கு பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் எங்களது நாட்டை நாம் பாதுகாக்க வேண்டும் என்ற ரீதி யிலே இந்த நாட்டை புலனாய்வாளர்களி னுடைய கையில் இந்த அரசு ஒப்படைக் குமாக இருந்தால் இந்த புலனாய்வாளர்கள் எங்கிருந்தெல்லாம் எப்படியெல்லாம் இந்த நாட்டை சூறையாடப்போகின்றார்கள் எப்படிப்பட்ட ஆபத்து வரப்போகின்றது என்பதை கண்டறிந்து ஏனென்றால் இன்று இந்தியாவினுடைய ரோ அமெரிக்காவினுடைய சி.ஐ.ஏ என்பவற்றை எடுத்துக்கொண்டால் அதாவது ஸ்கொட்லம் பொலிஸ் இவர்களை எடுத்துக்கொண்டால் இவர்கள் தான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக தற்பொழுது இருக்கின்றார்கள்.

எந்தவொரு விசக்கிருமிகளும் அந்த நாட்டிற்குள் வரவிடாதளவிற்கு இந்த புலனாய்வு கட்டமைப்பினர் தமது வேலைகளை சீரும் சிறப்புமாக செய்துவருகின்றார்கள் ஆகவே சீனாவிலிருந்து வருகின்ற ஒவ்வொரு பொருட்களையும் நாம் பார்க்க வேண்டும். என்ன கெமிக்கலை கலந்து இவ்வாறு சென்கின்றார்கள் என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் முதலாம் அலையிலே தாக்கப்படவில்லை இரண்டாம் அலையிலே தாக்கப்படவில்லை மூன்றாம் அலையிலே தாக்கப்படவில்லை நான்காம் அலையிலே அகோரமாக தீவிரம் எடுத்து ஆடுகின்றது. இன்று டெல்டா பிளஸ் என்று வருகின்றது. இன்னும் என்னவெல்லாம் வரப்போகின்றதோ தெரியவில்லை.

ஆகவே எமது நாட்டை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாக இருந்தால் ஒரு விழிப்புணர்வோடும் இன மத பேதங்களை கடந்து நாம் செயற்பட வேண்டும். அதைவிட அல்-கைதாவினுடைய தலையீடு இருக்கின்றது அதைப்பார்ப்பதா இதைப்பார்ப்பதா ஐக்கிய நாடுகள் சபையின் பிரச்சனைகளை பார்ப்பதா முதலாவது நாம் இந்த நாட்டிலே நிலையாக நிற்பதற்கு எமது நாட்டை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது.

வெளிநாட்டு விடயங்களை ஒப்பிட்டு நாம் பார்க்கும் பொழுது இலங்கையை பொறுத்தவரையிலே தேவையிருக்கின்றது. எனவே வருங்காலங்களிலே அனைவரும் தற்பொழுது பரவலாக பேசப்பட்டுக்கொண்டிருக்கின்ற விடயம் இந்த உள்ளாடைகளின் விவரங்கள். உள்ளாடைகள் இல்லாமல் பாரியளவு சிக்கல் உருவாகும் என்று முகநூல்களிலே இணையதளங்களிலே இவ்வாறு பரபரப்பாக இந்த செய்திகள் போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே இன்றைய சூழ்நிலையிலே பொருளாதார ரீதியாக இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

**நெற்றி பொறியன்**

# நோர்வே நாடாளுமன்றத்திற்கு தெரிவான முதலாவது இலங்கை தமிழ் பெண்



இலங்கையில் பிறந்த கம்சாயினி குணரத்னம் நோர்வேயின் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார். நோர்வேயின் தொழிற்கட்சி சார்பில் அவர் தேர்தலில் போட்டியிட்டார்.

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த கம்சாயினி குணரட்னம், தமது மூன்றாவது வயதில் பெற்றோருடன் நோர்வே நாட்டுக்கு புலம் பெயர்ந்தார்.

பின்னர் ஒஸ்லோவில் குடியுரிமை கிடைத்ததை அடுத்து, 2007 ஆம் ஆண்டு முதன்முறையாக ஒஸ்லோ மாநகரசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று, முதன் முதலாக மாநகரசபை உறுப்பினரானார்.

2015 ஆம் ஆண்டு ஒஸ்லோ மாநகர சபையின் பிரதி முதல்வராகவும் அவர் செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில், நோர்வே நாடாளுமன்றத்திற்கு தெரிவான முதலாவது இலங்கை பெண்ணாக அவர் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

# கொழும்பு தாமரை கோபுரம்



கொழும்பு தாமரை கோபுரம் அன்று(2021.09.17) இரவு 7 மணி முதல் 9 மணி வரை ஒளிர வைக்கப்பட்டிருந்தது.

உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டும் மற்றும் அனைத்து சுகாதார பிரிவை சேர்ந்தவர்களையும் கௌரவிக்கும் முகமாகவும் கொழும்பு தாமரை கோபுரம் இவ்வாறு ஒளிர வைக்கப் படிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி அமெரிக்கா நோக்கி பயணம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ அன்று (18) அதிகாலை அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு பயணமானார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகளின் 76 ஆவது பொதுச்சபை கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அமெரிக்கா விற்கு பயணித்துள்ளார்.

ஜனாதிபதி வெளிநாடொன்றில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவி த்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஜனாதிபதி கூட்டத்தொடரில் உரை நிகழ்த் தவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அரச தலைவர்கள் சிலருடன் ஜனாதிபதி பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதி ஆலோச கர் லலித் வீரதுங்க மற்றும் வெளவிவகார செயலாளர் அட்மிரல் பேராசிரி யர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ வுடன் அமெரிக்காவிற்கு பயணித்துள்ளனர்.



# நாட்டின் சனத்தொகையில் 50 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டது

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 50 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

அன்று (17) மாலை வரையான தரவுகளின் அடிப்படையில் நாட்டின் மொத்த சனத்தொகையான 2 கோடியே 19 இலட்சத்து 19,413 பேரில் அரைவாசியினருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 89,73,670 பேர் ளுைழிெயசஅ தடுப்பூசியும் அஸ்ட்ரா செனேக்கா தடுப்பூசியை 949,105 பேரும் பெற்றுக் கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன் 758,282 பேருக்கு மொடேர்னா தடுப்பூசியும் 243,685 பேருக்கு பைசர் தடுப்பூசியும் 43,453 பேருக்கு ஸ்புட்னிக் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, நாட்டில் இதுவரை ஒரு கோடியே 9 இலட்சத்து 68,195 பேர் இரு தடுப்பூசிகளையும் செலுத்திக்கொண்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

## புத்தக விழாவில் இந்திய வீரர்கள் முகக்கவசம் அணியவில்லை என குற்றச்சாட்டு

லண்டனில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் இந்திய அணியினர் எவரும் முகக்கவசம் அணியாது பங்கேற்றிருந்ததாக அந்த அணியின் முன்னாள் வீரர் திலிப் தோஷி (Dilip-Doshi) குற்றம் சுமத்தியுள்ளார். அண்மையில் இங்கிலாந்துடன் இடம்பெற்ற டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் ரவிசாஸ்த்திரி உள்ளிட்டோருக்கு கொவிட்-19 தொற்று உறுதியானது. இதனையடுத்து கொரோனா அச்சம் காரணமாக இரண்டு அணிகளுக்கும் இடையிலான இறுதி போட்டி கைவிடப்பட்டிருந்தது

இந்தநிலையில், குறித்த புத்தக வெளியீட்டு விழாவில் இந்திய அணி வீரர்கள் முகக்கவசம் இன்றி கலந்துக்கொண்டமை பொறுப்பற்ற செயலாகும் என திலிப் தோஷி குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்து வீரர்கள் முழுமையான தடுப்பூசியினை பெற்றுள்ளார்கள். எனினும் அதிகளவானோர் கூடுவார்கள் என்பதனை கருத்திற்கொண்டு இந்திய அணி வீரர்கள் செயற்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



## இலங்கை அணி வீரர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை SLC நிராகரிப்பு!

தென்னாபிரிக்காவிற்கு எதிரான T20 கிரிக்கெட் தொடரில் கலந்து கொண்ட இலங்கை அணி வீரர்கள் சிலர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நிராகரித்துள்ளது. தென்னாபிரிக்காவுடனான கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் வீரர்கள் சிலர் குறைந்த திறமையை வெளிப்படுத்தி, போட்டியில் தோல்வியடைவதற்கு காரணமாக அமைந்ததாக செய்திகள் வெளியாகின. அவ்வாறான செய்தி தொடர்பில் அணி முகாமைத்துவத்தினால் தமக்கு எந்தவொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை என கிரிக்கெட் நிறுவனம் அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான சர்வதேச ஒருநாள் தொடரிலும் இருபதுக்கு இருபது தொடரிலும் ஒரே அணியின் உறுப்பினர்களே பங்குபற்றியதாக, அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவிற்கு எதிராக ஒருநாள் தொடரில் வெற்றி பெற்ற இலங்கை அணி, உலகக்கிண்ண லீக்கின் புள்ளிப்பட்டியலில் முன்னேற்றமடைந்துள்ளதாகவும் கிரிக்கெட் நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது. இலங்கை கிரிக்கெட் அணி அண்மைக்காலத்தில் போட்டிகளில் வெற்றி பெற்று, வெற்றிப்பாதையை நோக்கிச் செல்வதாகவும் ஊடக ஒழுக்கத்திற்கு மதிப்பளித்து சரியான செய்திகள் வெளியிடப்படாவிட்டால், உலகக் கிண்ண தொடரில் கலந்துகொள்ளவுள்ள அணியின் மனோதிடம் பாதிக்கப்படும் எனவும் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதவி துறக்கும் விராட் கோஹ்லி

அடுத்த மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ண தொடருக்குப் பிறகு விராட் கோஹ்லி, இந்தியாவின் ரி-20 அணித்தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

பயிற்சியாளர் ரவிசாஸ்திரி மற்றும் துணைத்தலைவர் ரோஹித் சர்மாவுடன் விவாதித்து, டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தனது அணித்தலைமை பணிச்சுமையை சிறப்பாக நிர்வகிப்பதற்காக இந்த முடிவுக்கு வந்ததாக கோஹ்லி விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், ‘இந்தியாவுக்காக விளையாடியது மட்டுமல்லாமல், இந்திய அணியை வழிநடத்தியது எனக்கு கிடைத்த மிகப் பெரிய அதிர்ஷ்டம். இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக நான் இருந்த நேரத்தில் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி.

என்னுடைய அணி வீரர்கள், அணி நிர்வாக குழு, தேர்வுக் குழு, பயிற்சியாளர்கள் மற்றும் நாங்கள் வெற்றிபெற வேண்டும் என நினைத்த ஒவ்வொரு இந்தியருக்கும் நன்றி. அவர்கள் இல்லாமல் நான் இதை செய்திருக்க முடியாது.

வேலைப் பளு என்பது மிக முக்கியமான விடயம் என்பதை புரிந்து கொள்கிறேன். கடந்த 8 முதல் 9 ஆண்டுகளாக நான் மூன்று வித கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடி வருவதால் அதிக வேலைப் பளு இருப்பதை உணர்கிறேன். அதேபோல கடந்த 5 முதல் 6 ஆண்டுகளாக அணியின் தலைவராக செயற்பட்டு வருவதாலும் வேலைப் பளு அதிகமாக உள்ளது.

எனவே இந்திய அணியை டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வழிநடத்த எனக்கு சற்று வேலை குறைப்புத் தேவைப்படுவதாக நினைக் கிறேன். அதன் பொருட்டு ஒக்டோபர் மாதம் டுபாயில் நடக்கும் ரி-20 உலகக்கிண்ண தொடருடன் ரி-20 அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுகிறேன்.

நான் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகினாலும் ஒரு துடுப்பாட்ட வீரராக ரி-20 அணிக்கு எனது பங்களிப்பை முழுமையாக கொடுப்பேன்' என கூறினார்.

2017ஆம் ஆண்டு டோனியிடம் இருந்து ரி-20 அணித்தலைவர் பொறுப்பை ஏற்ற விராட் கோஹ்லி, அணித்தலைவராக தனது முதல் தொடரிலேயே இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரை 2-1 என வெற்றி கொண்டார்.

இதுவரை விராட் கோஹ்லி 45 போட்டிகளில் இந்திய அணியை வழி நடத்தியுள்ளார். இதில் 29 வெற்றிகள், 14 தோல்விகள் மற்றும் இரண்டு போட்டிகளுக்கு முடிவில்லை.

சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்த விராட் கோஹ்லி, 3,000 ரி-20 ஓட்டங்களை குவித்த ஒரே ஆண்கள் கிரிக்கெட் வீரர் ஆவார். அணித்தலைவராக கோஹ்லியின் துடுப்பாட்ட சராசரி 48.45 ஆகும். இதில் 12 அரைசதங்கள் அடங்கும்.

32 வயதான விராட் கோஹ்லி, இதுவரை 89 ரி-20 போட்டிகளில் விளையாடி 3,159 ஓட்டங்களை குவித்துள்ளார். அதிகப்பட்ச ஓட்ட எண்ணிக்கை 94 ஆகும். 28 அரைசதங்கள் அடித்துள்ளார்.

விராட் கோஹ்லி பதவியை துறக்கும் அதேவேளை, ஐ.பி.எல். கிரிக்கெட் மட்டுமல்லாமல் சர்வதேச கிரிக்கெட்டிலும் சாதித்துக்காட்டியுள்ள வெற்றிகரமான அணித்தலைவர் ரோஹித் சர்மா, ரி-20 அணியை வழிநடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# உலக பார்வை



## ஆபிரிக்க ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தலைவர் அதான் அபு வலிட் அல் ஷராவி கொல்லப்பட்டார்

பிரெஞ்சு படையினர் நடத்திய தாக்குதலில் ஆபிரிக்க ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தலைவர் அதான் அபு வலிட் அல் ஷராவி (Abu Walid Al-Sahrawi) கொல்லப்பட்டுள்ளார். இதனை பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரான் தமது ட்விட்டர் பதிவின் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் தலைவர் கொல்லப்பட்ட போதும், மாலியில் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கையில் பிரான்ஸ் தொடர்ந்து ஈடுபடும் என மெக்ரான் அறிவித்துள்ளார்.

மாலி, பர்கினோ பெசோ, நைஜர் ஆகிய நாடுகளில் இந்த பயங்கரவாத அமைப்பு செயற்பட்டு வரும் நிலையில், அதனை தடுப்பதற்கு குறித்த நாடுகளுக்கு, பிரான்ஸ் உதவி வருகிறது. இதற்காக பிரெஞ்சு படைகள் மாலியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இத்தாலியில் ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசி அட்டை கட்டாயம்

இத்தாலியில் அனைத்து ஊழியர்களுக்கும் கொரோனா தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. "green pass" எனப்படும் குறித்த சான்றிதலில் தடுப்பூசி ஏற்றியமை, தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்பதற்கான ஆதாரம் அல்லது தொற்றிலிருந்து மீண்டு வருவதற்கான ஆதாரங்கள் உள்ளடங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான நடைமுறையை அறிமுகப்படுத்திய முதலாவது நாடாக இத்தாலி பதிவாகியுள்ளது. குறித்த அட்டையின்றி எவரும் தொழிலுக்கு செல்ல முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது. "green pass" சான்றிதழ் அனைத்து ரயில் நிலையங்கள், திரையரங்குகள், உணவகங்கள், நீச்சல் தடாகங்கள் ஆகியவற்றுக்கும் கட்டாயமாக்கப்படவுள்ளது.

## பிரித்தானியாவின் வெளியுறவு செயலாளராக எலிசபெத் ட்ரஸ் நியமனம்!

பிரித்தானியாவின் வெளியுறவு, பொதுநலவாய மற்றும் மேம்பாட்டு விவகாரங்களுக்கான செயலாளராக எலிசபெத் ட்ரஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 'பிரித்தானியாவுக்கு வழங்கப் போகும் ஒரு வலுவான மற்றும் ஐக்கியப்பட்ட குழுவை பிரதமர் அமைத்துள்ளார்' என்று ட்ரஸ் கூறினார்.

பிரதமர் ஜோன்சன், தனது புதிய அமைச்சரவை 'நாடு முழுவதையும் ஒன்றிணைத்து சமன் செய்ய அயராது உழைக்கும்' என கூறினார். பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனின் அமைச்சரவை மாற்றத்தில் வெளியுறவுத்துறை செயலாளராக இருந்த டொமினிக் ராப்புக்கு பதிலாக லிஸ் ட்ரஸ், வெளியுறவு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



மைக்கேல் கோவ், வீட்டுவசதி, சமூகங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்க அமைச்சகத்திற்கு மாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டதால், அவரது பதவி உயர்வு வந்தது. இதன் மூலம், கன்சர்வேடிவ் வாக்காளர்களிடையே மிகவும் பிரபலமான அமைச்சரவை அமைச்சரான லிஸ் ட்ரஸ், குறிப்பிடத்தக்க பதவி உயர்வு பெற்று முதல் பெண் டோரி வெளியுறவு செயலாளராக ஆனார்.

இதற்கு முன் சர்வதேச வர்த்தக செயலாளராக பணியாற்றிய லிஸ் ட்ரஸ், இரண்டாவது பெண் வெளியுறவு செயலாளராக உள்ளார். ப்ரிதி பட்டேல் தனது உட்துறை செயலாளராக தனது வேலையை வைத்திருப்பதை உறுதி செய்த பிறகு பெண்கள் இப்போது நான்கு சிறந்த அமைச்சரவை வேலைகளில் இரண்டை ஆக்கிரமித்துள்ளனர். மற்ற இரண்டு முக்கிய வேலைகள் ரிஷி சுனக் மற்றும் பிரதமரால் பராமரிக்கப்படுகின்றன.

## Time இதழ் வெளியிட்டுள்ள உலகின் செல்வாக்கு மிக்கவர்கள் பட்டியலில் தலிபான் தலைவர்

Time இதழின் செல்வாக்கு மிகுந்த 100 பேர் பட்டியலில் (The 100 Most Influential People of 2021) இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், சீன அதிபர் ஷி ஜின்பிங், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். இவர்களுடன் தலிபான் மூத்த தலைவரும், ஆப்கானிஸ்தானின் துணை பிரதமருமான அப்துல் கனி பராதர் பெயரும் இடம்பெற்றுள்ளது. டோகாவில் அமெரிக்காவுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் தலிபான்கள் சார்பில் பங்கேற்றவரும், படை வெளியேற்ற உடன்பாட்டில் கையெழுத்திட்டவரும் அவர்தான். தலிபான்களின் அரசியல் முகமாக அவர் பார்க்கப்படுகிறார்.

உலகின் செல்வாக்கு மிகுந்த 100 பேர் பட்டியலை Time இதழ் வெளியிட்டிருக்கிறது. அதில் பல்வேறு பிரிவுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. தலைவர்கள் என்ற பிரிவின் கீழ் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், துணை அதிபர் கமலா ஹாரிஸ், சீன அதிபர் ஷி ஜின் பிங், அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடம் வழங்கப்பட்டிருக்கிறது.ஒவ்வொரு தலைவர்களைப் பற்றிய குறிப்புகளும் இதில் இடம்பெற்றிருக்கின்றன. அப்துல் கனி பராதரை பற்றிய குறிப்பை பாகிஸ்தான் பத்திரிகையாளர் அகமது ரஷீத் எழுதியுள்ளார். கடந்த ஆகஸ்டில் தலிபான்களுக்கு கிடைத்த வெற்றி, பராதர் நடத்திய பேச்சுவார்த்தையின் ஒரு பகுதி என்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். யாருக்கு மன்னிப்பு வழங்குவது போன்ற அனைத்து முக்கிய முடிவுகளையும் தலிபான் இயக்கத்தின் சார்பில் பராதரே எடுப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோடியைப் பற்றிய குறிப்பில், "அவர் நாட்டை மதச் சார்பின்மையில் இருந்து தூர விலக்கியிருக்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது. சுதந்திர இந்திய வரலாற்றில் நேரு, இந்திரா காந்தி ஆகியோருக்குப் பிறகு அரசியலை ஆக்கிரமித்திருக்கும் மூன்றாவது தலைவர் நரேந்திர மோடி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பற்றி, அவர், "கடும்போக்கு அரசியலின் முகமாக விளங்குகிறார்" என்று கூறப்பட்டுள்ளது. "அவர் கட்சியை வழிநடத்தவில்லை. அவர்தான் கட்சியே" என்கிறது Time இதழ் குறிப்பு.

## சீனாவிற்கு பதிலடி வழங்க 3 நாடுகள் இணைவு

சீனாவின் செயற்பாடுகளுக்கு பதிலடி வழங்குவதற்கான விசேட பாதுகாப்பு உடன்படிக்கையொன்றை பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகியன அறிவித்துள்ளன. Aukus என அழைக்கப்படும் இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கையை ஸ்தாபிப்பது தொடர்பில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜான்ஸன் மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் ஆகியோர் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். நவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்களை பரிமாறிக்கொள்வதற்காக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.



இந்த ஒத்துழைப்பின் மூலம் அணு ஆற்றல் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களை தயாரிப்பதற்கான வாய்ப்பு முதற்தடவையாக அவுஸ்திரேலியாவிற்கு கிடைத்துள்ளது. அத்துடன், புலனாய்வு, தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் Cyber விடயங்களையும் இந்த பாதுகாப்பு உடன்படிக்கை உள்ளடக்கியுள்ளது. இந்தோ பசுபிக் வலயத்தில் அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கம் மற்றும் இராணுவ பிரசன்னம் குறித்து இந்த மூன்று நாடுகளும் கவலை கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த Aukus உடன்படிக்கையின் விளைவாக, பிரான்ஸ் வடிவமைக்கின்ற நீர்மூழ்கிக் கப்பல்களை தயாரிப்பதற்கான உடன்படிக்கையை அவுஸ்திரேலியா இரத்து செய்துள்ளது.

அவுஸ்திரேலிய கடற்படைக்காக 12 நீர்மூழ்கிக் கப்பல்களை தயாரிப்பதற்காக 50 பில்லியன் அவுஸ்திரேலிய டொலர் பெறுமதியான உடன்படிக்கையொன்று 2016 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அவுஸ்திரேலியாவினால் இதுவரை ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய பாதுகாப்பு உடன்படிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. எனினும், இந்த நீர்மூழ்கிக் கப்பல்களின் தயாரிப்பில், உள்ளூர் வளங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற அவுஸ்திரேலியாவின் கோரிக்கையினால் ஏற்பட்ட தாமதங்களால், குறித்த உடன்படிக்கை பின்னடைவை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


# நல்லமலா மலைக்காடுகள்

நல்லமலை மலைக்காடுகள் (தெலுங்கு:-கருமலை காடுகள்) இந்தியா நாட்டில் உள்ள கிழக்கு குன்றுகளின் ஒரு பகுதி ஆகும்.இந்த மலைக்காடுகள் இந்திய நாட்டின் ஆந்திர மாநிலம் கர்நூல், நெல்லூர், குண்டூர், பிரகாசம், கடப்பா, சித்தூர் ஆகிய மாவட்டங்கள் மேலும் தெலங்காணா மாநிலம் மகபூப்நகர், நல்கொண்டா ஆகிய மாவட்டங்களில் பரவி இருக்கிறது. இது பொதுவாக வடக்கு-தெற்காக பரவி உள்ளது. சோழ மண்டலக் கடற்கரைக்கு இணையாக மேற்கே சும்மா 430 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இந்த மலைக்காடுகள் கிருஷ்ணா ஆறு மற்றும் வட பெண்ணை ஆறுக்கு இடையே அமைந்துள்ளது. இதன் வடக்கு எல்லை நீர் பாசன பகுதியாகவும் தெற்கு எல்லை திருப்பதி மலையுடன் இணைந்தும் உள்ளது.

இது மிகவும் பழமைவாய்ந்த மலைக்காடுகள் ஆகும். இந்த மலைகள் பல ஆண்டுகளாக கடுமையான காலநிலை மற்றும் காற்று அரிப்பால் தாக்குதலுக்கு உள்ளாகுகிறது. மலைத்தொடரின் சராசரி உயரம் 520 மீட்டர் ஆகும். உயரிய சிகரங்களான பாய்ராணி கொண்டா 1100 மீட்டர், குண்டல் பரமேஸ்வரா 1048 மீட்டர் ஆகும். இந்த இரு சிகரங்களும் கம்பம் நகரத்திற்கு வடமேற்காக அமைந்துள்ளது. மற்றும் 800 மீட்டர் அளவுடைய பல சிகரங்கள் இந்த மலைத்தொடரில் அமைந்துள்ளது.





இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 19.09.2021 அன்று வெளியிடப்பட்டது.